




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 163 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை

Chennai Volume: 01 Issue: 163 Sunday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(25-01-2026)
விசுவாவசு ஆண்டு, தை -11
பிறை: வளர்பிறை
திதி
சப்தமி இரவு 9.19 வரை
பிறகு அஷ்டமி
நட்சத்திரம்:
ரேவதி நண்பகல் 12.10
வரை பிறகு அசுவினி
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 12.00 – 1.30 மணி.
சூலம் – மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நற்செய்தி |
| ரிஷபம் | பரிசு |
| மிதுனம் | ஆக்கம் |
| கடகம் | மேன்மை |
| சிம்மம் | இன்பம் |
| கன்னி | உழைப்பு |
| துலாம் | தனம் |
| விருச்சிகம் | வாழ்வு |
| தனுசு | பாசம் |
| மகரம் | பக்தி |
| கும்பம் | செலவு |
| மீனம் | பயணம் |

# சாதனை மேல் சாதனை படைப்பதுதான் திராவிட மாடல் அரசு

## மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**சென்னை,ஜன.25:**

திராவிட மாடல் அரசின் சாதனைகளால் தமிழகம் தலைநிமிர்ந்துள்ளதாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சட்டமன்றத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலுரையில் பேசியதாவது;

"சிக்கலான சூழலில் திமுக ஆட்சிக்கு வந்தது. ஆட்சி பொறுப்பேற்றதும் ஒருபுறம் மகிழ்ச்சி இருந்தாலும், மறுபுறம் கவலையும் இருந்தது. பின்னடைவில் இருந்த தமிழகம்,ஒன்றிய பாஜக அரசு ஆகியவற்றால் கவலையில் இருந்தேன். இப்போது தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. 5 ஆண்டுகள் கடந்த நிலையில், நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன். விடியலை அனைத்து வீடுகளும் பார்க்கின்றன.

2 லட்சம் பேருக்கு கலைஞர் இல்லம் வீடு கட்டுக்கொடுக்கப்பட்டுள்ளது. 4 ஆயிரம் கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. 12 லட்சம் கோடி தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 1.35 லட்சம் கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பெண்களுக்கு ரூ.29 ஆயிரம் கிடைத்துள்ளது. அரசு ஊழியர்களின் 23 ஆண்டுகால கோரிக்கையை ஏற்று, உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. விடியல் பயணம் மூலம் ஒவ்வொரு மகளிரும் தலா ரூ.60 ஆயிரம் சேமித்துள்ளனர்.

சாதனைக்கு மேல் சாதனை படைப்பதுதான் திராவிட மாடல் அரசு.

இந்த அரசு பொறுப்பேற்று, 1,724 நாட்கள் ஆகிறது. 15,137 கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளேன். இதில் 8 ஆயிரம் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளேன். ஒவ்வொரு நாளும் மக்களுக்காகவே வாழ்ந்தேன். திமுக அரசின் சாதனைகளை எதிர்க்கட்சிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கவர்னரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் நான், அவரின் உரைக்கு விளக்கம் அளிக்கும் சூழல் உள்ளது. ஒரே காரணத்தை திரும்ப திரும்ப கூறி சட்டசபையை விட்டு கவர்னர் வெளியேறி வருகிறார். கவர்னரின் செயல் வருத்தமளிக்கிறது. நாட்டின் மீதும், நாட்டுப்பண் மீதும் அளவற்ற மரியாதை வைத்திருப்பவர்கள் நாங்கள். யாரும் எங்களுக்கு தேசபக்தி குறித்து பாடம் எடுக்க வேண்டாம். நாட்டுக்காக போராடியவர்கள் அவர்கள் இல்லை. சோதனைகள் எனக்கு புதியது அல்ல.

சோதனைகளை கடந்து வென்றவன் நான். திராவிட மாடல் 2.0 ஆட்சியின் எங்களின் சாதனைகளை நாங்களே முறியடிப்போம்."

இவ்வாறு அவர் பேசினார்.

## புதிய அறிவிப்புகள்

1.கலைஞர் கனவு இல்லம்
கலைஞர் கனவு இல்லத்தின் கீழ் ரூ.3,500 கோடியில் மேலும் 1 லட்சம் வீடுகள் கட்டப்படும்

2. சாலைகள் மேம்பாடு
முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டின் கீழ் ரூ.1,088 கோடியில் 2,200 ஊரக சாலைகள் மேம்படுத்தப்படும்.

3.ஓய்வூதியம்
முதியவர்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் உட்பட 1,80,000 பேருக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும்

3. சத்துணவு பணியாளர்கள்

* சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கு, கிராம ஊராட்சி செயலர்களுக்காக்ன ஓய்வூதியம் 2 ஆயிரத்தில் இருந்து 3,400 ஆக உயர்த்தி வழங்கப்படும்.
* பணி நிறைவின்போது வழங்கப்படும் ஒட்டுமொத்த தொகை ரூ.1 லட்சத்தில் இருந்து 2 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.
* சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் பணியாளர்கள் உயிரிழந்தால், இறுதிச்சசங்குக்கு ரூ.20 ஆயிரம் வழங்கப்படும்.
* அங்கன்வாடி உதவியளர்கள், சமையலர்கள், தூய்மை பணியாளர்களுக்கான ஓய்வூதியம் ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.3 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.
* பணி நிறைவின்போது வழங்கப்படும் ஒட்டுமொத்த தொகை ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.1 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

4. பகுதி நேர ஆசிரியர்கள்

* ஆசிரியர்கள் காலி பணியிடங்களை நிரப்பும்போது, பகுதி நேர ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர்களாக வருவதற்கு சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படும்.
* பகுதி நேர ஆசிரியர்களின் பணிக்காலத்துக்கு ஏற்ப சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

## சென்னையில் டிரோன்கள் பறக்கத் தடை



**சென்னை,ஜன.25:**

சென்னையில் வருகிற திங்கட்கிழமை அன்று குடியரசு தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. சென்னை மெரினா கடற்கரை உழைப்பாளர் சிலை அருகே நடக்கும் பிரமாண்ட விழாவில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கவர்னர் ஆர்.என்.ரவி தேசிய கொடியை ஏற்றி வைப்பார். இதையொட்டி, சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்தி கமிஷனர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

நிகழ்ச்சி நடக்கும் உழைப்பாளர் சிலை பகுதி மற்றும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரது வீட்டில் இருந்து நிகழ்ச்சிக்கு வரும் சாலைகள் உள்ள பகுதி, இதேபோல, கவர்னர் ஆர்.என்.ரவி நிகழ்ச்சிக்கு வரும் சாலையில் உள்ள பகுதி ஆகியவை சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதிகளில் டிரோன்கள் பறப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்துக்கு அருகிலுள்ள வான்வெளியைச் சுற்றி அல்லது வேறு வழியில் லேசர் கற்றை விளக்குகள், சூடான காற்று பலூன்கள் இணைக்கப்பட்ட பலூன் மற்றும் ஒளி உமிழும் பொருட்கள், பறக்கும் கிளைடர்கள் மற்றும் பிற பறக்கும் பொருட்களை வெளியிடுவதை தடை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நேற்று முதல் மார்ச் 23-ந் தேதி வரை சுமார் 60 நாட்களுக்கு இந்த தடை உத்தரவு அமலில் இருக்கும்.

## வர்த்தக ஒப்பந்தங்களால் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள்: பிரதமர் மோடி!

**சென்னை,ஜன.25:**

வர்த்தக ஒப்பந்தங்களால் இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகி வருவதாகப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

18வது ரோஜ்கர் மேளா தில்லியின் இன்று நடைபெற்றது. அந்த திட்டத்தின் கீழ் 61 ஆயிரம் பணி நியமனக் கடிதங்களை அளிக்கும் திட்டத்தைப் பிரதமர் காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

தொடங்கிவைத்தப் பின்னர் அவர் பேசியதாவது,

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், இந்தியா பல நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடம்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான



இளைஞர்களைக் கொண்ட நாடு இந்தியா. தனது அரசு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள இளைஞர்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த தொலைநோக்குப் பார்வையைச் செயலாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கிய முயற்சிதான் இந்த ரோஜ்கர் மேளா. மேளா தொடங்கப்பட்டதிலிருந்து, நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட ரோஜ்கார் மேளாக்கள் மூலம் 11 லட்சத்திற்கும் மேற்பட்ட பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

18வது ரோஜ்கர் மேளா நாடு முழுவதும் 45 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிதாகப் பணியமர்த்தப்பட்ட வேட்பாளர்கள், அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் சேர்ந்தனர்.புதிதாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் உள்துறை அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், நிதிச் சேவைகள் துறை, உயர் கல்வித் துறை உள்ளிட்டவற்றில் பணியாற்றுவார்கள். இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## மாமல்லபுரத்தில் 'ரோப்கார்' சேவை: மெட்ரோ ரயில் நிறுவனம் ஆலோசனை

**சென்னை,ஜன.25:**

தமிழகத்தில் முக்கிய சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், கொடைக்கானலில் ரோப் கார் சேவையைத் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய தனியாா நிறுவனத்துடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் விரைவில் ஒப்பந்தம் செய்யவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனா.

மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்த முடியாத தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலங்களான உதகை, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் ரோப் கார் சேவையைத் தொடங்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதன் தொடக்கமாக நீலகிரி மாவட்டம், உதகையில்



ரோப் கார் சேவையை செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை பெறுவதற்கு தனியார் நிறுவனத்துடன் மெட்ரோ ரயில் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. அந்த நிறுவனத்தின் அறிக்கை 3 மாதங்களில் கிடைக்கும். அதன்பிறகு ரோப் கார் திட்டத்துக்கான, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

இதேபோல, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் ரோப் கார் சேவையைக் கொண்டுவர மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய தனியார் நிறுவனத்துடன் விரைவில் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக திட்ட அதிகாரி அா்ச்சுனன் தெரிவித்தாா்.

## காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு: தேசிய நெடுஞ்சாலைகள் மூடல்



**ஜம்மு,ஜன.25:**

ஜம்மு காஷ்மீரில் உயரமான பகுதிகளில் கடுமையான பனிப்பொழிவு நிலவுகிறது. இதனால் மலைப்பாங்கான மாவட்டங்களில் பள்ளிகள் நேற்று மூடப்பட்டன. பனிப்பொழிவு ஏற்பட்டதால் ஸ்ரீநகர் விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. 26 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. அதேநேரத்தில் ஜம்மு நகரம் உள்பட சமவெளிகளில் மிதமான மழை பெய்தது. இதனால் 2 மாதங்களுக்கும் மேலாக நீடித்த வறட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஜம்மு பிரிவில் உள்ள பூஞ்ச் நகரம் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்குப் பிறகு பனிப்பொழிவை சந்தித்துள்ளது, இது உள்ளூர்வாசிகளிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. ராம்பன், பாரமுல்லா, பதோத், தோடா, கிஷ்த்வார், பூஞ்ச், ரஜோரி, ரியாசி, உதம்பூர் மற்றும் கதுவா மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் பனிப்பொழிவு தொடர்ந்து நீடித்தது.

பனிப்பொழிவு நிறைந்த பகுதிகளில் 5 அங்குலம் முதல் ஒரு அடி வரை பனி குவிந்துள்ளது. வடக்கு காஷ்மீரில் 300 பனி அகற்றும் எந்திரங்கள் மூலம் சாலைகள் மற்றும் முக்கிய பகுதிகளில் குவிந்துள்ள பனிக்கட்டிகள் அகற்றும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. மீட்பு பணிக்காக 26 கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

காஷ்மீரை இந்தியாவின் பிற பகுதிகளுடன் இணைக்கும் ஒரே சாலையான 270 கி.மீ. ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் பனிப்பொழிவைத் தொடர்ந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பனிஹால்-காசிகுந்த் பகுதியில் நவ்யுக் சுரங்கப்பாதையில் பனிப்பொழிவு காரணமாக ஜம்முவிலிருந்து ஸ்ரீநகர் நோக்கியும், ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் இரு திசைகளிலும் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு காரணமாக சாலைகளில் குவிந்து வரும் பனிகட்டிகளால் முகல் சாலை, ஸ்ரீநகர்-லே தேசிய நெடுஞ்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. இந்த சாலைகள் முழுமையாக மீட்டெடுக்கப்பட்டு போக்குவரத்துக்கு பாதுகாப்பானதாக அறிவிக்கப்படும் வரை பயணிகள் பயணத்தைத் தவிர்க்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

பனிப்பொழிவைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ரஜோரி, பூஞ்ச் மற்றும் கதுவா மாவட்டங்களின் மலைப்பாங்கான மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகளையும் மூட அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதேபோல இமாசல பிரதேசத்தில் ஷிம்லா, மணாலி உள்ளிட்ட பகுதிகளிலும் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது.

## காஷ்மீரில் தீவிரவாதி சுட்டுக் கொலை

**ஜம்மு,ஜன.25:**

ஜம்மு காஷ்மீரில் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதியை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.

இது குறித்து ஜம்மு காவல்துறை ஐ.ஜி பீம் சென் துதி கூறும்போது, “கதுவா மாவட்டத்தில் உள்ள பிலாவர் பகுதியில் ஜம்மு காஷ்மீர் போலீஸார், மத்திய ரிசர்வ் போலீஸார், ராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பின் கமாண்டர் உஸ்மான் என தெரியவந்தது. அவரிடமிருந்து எம்4 தானியங்கி துப்பாக்கி உட்பட ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன” என்று தெரிவித்தார்.

## ஓய்வூதியர்களின் ஊதிய உயர்வுக்கு ஒப்புதல்

**புதுடெல்லி,ஜன.25:**

மத்திய நிதித்துறை அமைச்சகம் நேற்று கூறியிருப்பதாவது: பொதுத்துறை காப்பீடு நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும ஓய்வூதியதாரர்களின் ஊதிய உயர்வு 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் அமல்படுத்தப்படும். இதற்கு ரூ.8,170.30 கோடி செலவாகும்.

ரிசர்வ் வங்கி ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களின் ஊதியத்தை மாற்றியமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் 10 சதவீதம் அதிகரிக்கும். இது கடந்த 2022-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதி முதல் அமலாகும். இதில் நிலுவைத் தொகையை ஒரே தவணையாக வழங்க ரூ.2,485.02 கோடி செலுத்தப்படும். இவ்வாறு நிதித்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

## தை 2-ஆம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு ஊஞ்சல் சேவை சிறப்பு வழிபாடு





தஞ்சாவூர்.ஜன.25:

தஞ்சாவூர் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை மாதம் 2-வது வெள்ளிக்கிழமையை முன்னிட்டு வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், 1008 விளக்குகள் ஏற்றி, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதிபாராதனையும் நடைபெற்றது. ஊஞ்சலில் வாசவி அம்மனை அமர வைத்து ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் பாட்டுகள் பாடி மகா தீபாராதனையும் நடைபெற்றது.

வாசவி அம்மனுக்கு புதியதாக ஊஞ்சல் வழங்கியவர் சிங்கப்பூர் குணசேகரன் காயத்ரி அவர்கள் வெகு சிறப்பாக ஊஞ்சல் சேவையும் நடைபெற்றது. பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மயிலாடுதுறை அருண்பிரியா மருத்துவமனை சார்பில் இலவச நுரையீரல் மருத்துவ முகாம்



மயிலாடுதுறை,ஜன.25:

நோய் தொற்றுகள் அதிகரித்து வரும் சூழலில் நுரையீரல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மயிலாடுதுறை அருண்பிரியா மருத்துவமனை சார்பில் இலவச நுரையீரல் மருத்துவ முகாம் நடைபெற்றது.

அருண்பிரியா மருத்துவ மனை தலைவர் மருத்துவர் செல்வம் தலைமை வகித்தார். மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மருத்துவர் ரெத்தின அருண்குமார், ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம்முகாமில் ஆஸ்துமா, நுரையீரல் வீக்கம், முச்சுக்குழாய் அழற்சி, நுரையீரல் புற்றுநோய், காச நோய், நிமோனியா, காய்ச்சல் ஒவ்வாமை, மூச்சுத்திணறல் போன்ற நுரையீரல் தொடர்பான பிரச்சனைகளுக்கு சிறப்பு மருத்துவ நிபுணர்கள் மருத்துவர் காவியா, மருத்துவர் ஸ்ரீதர்ராஜ் ஆகியோர் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை அளித்தனர்.

முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் ரூ.1500 மதிப்புள்ள நுரையீரல் தொடர்பான பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மயிலாடுதுறையில் நடைபெற்ற இலவச நுரையீரல் மருத்துவ முகாமில் குத்தாலம், சீர்காழி, தரங்கம்பாடி, செம்பனார்கோவில், நீடூர, மணல்மேடு உள்ளிட்ட மயிலாடுதுறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை அருண்பிரியா மருத்துவமனை நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

## மக்கள் நீதி மய்யம் கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றம்



சென்னை, ஜன.25:

மக்கள் நீதி மய்யம் கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றம்

சட்டமன்றத்தின் மாண்பைக் குலைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுவது ஏற்கத்தக்கதல்ல.

தமிழர் பெருமையை வெளிப்படுத்தும் அகழாய்வு அறிக்கைகளை முடக்குவதற்கு கண்டனம்.

மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் தலைமையில் நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. இதில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள மாற்றங்களுக்கு கண்டனம்.

சட்டமன்றத்தின் மாண்பைக் குலைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுவது ஏற்கத்தக்கதல்ல.

தமிழர் பெருமையை வெளிப்படுத்தும் அகழாய்வு அறிக்கைகளை முடக்குவதற்கு கண்டனம்.

மீண்டும் மீண்டும் பல்வேறு வடிவங்களில் இந்தியை திணிப்பதையும் கண்டிப்பதாக மக்கள் நீதி மய்யம் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பழைய ஓய்வூதியத்திட்ட பலனை வழங்கும் தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மேலும், சட்டமன்ற தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட இன்று முதல் விருப்பமனு அளிக்கலாம் என மக்கள் நீதி மய்யம் செயற்குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தேசிய பெண் குழந்தைகள் தின விழா கொண்டாட்டம்..!



இராமநாதபுரம்,ஜன.25:

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தேசிய பெண் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது.

பள்ளிக்கு வந்த பெண் குழந்தைகளுக்கு தலைமை யாசிரியர் ச. கிறிஸ்து ஞான வள்ளுவன் பூச்சரம் கொடுத்து வரவேற்றார். பெண் குழந்தைகளின் கல்விக்காக தமிழ்நாடு அரசு வழங்கும் நலத்திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

நம் நாட்டின் முதல் பிரதமராக இந்திரா காந்தி அவர்கள் ஜனவரி 24, 1966 இல் பதவியேற்றார். இதனை அடிப்படையாக கொண்டு பெண் குழந்தைகளின் நலனைக் காக்கும் வகையில் 2009 முதல் ஆண்டுதோறும் ஜனவரி 24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்நாள் கொண்டாடுவதின் மூலம் பாலின சமத்துவம், சமவேலைக்கு சமஊதியம் போன்ற கருத்துக்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முடிகிறது.

## பரந்தூரில் விமான நிலையம் கட்ட வேண்டும் என்பது பேராசை - சீமான்



சென்னை, ஜன.25:

சென்னை தாம்பரத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

*அரசு இலவசமாக வழங்கும் ரேஷன் அரிசியை எந்த அமைச்சர்கள் சாப்பிடுவார்கள்?

* 60 ஆண்டுகளாகியும் தலைநகரில் மழை வெள்ளம் வடிய ஏற்பாடு செய்யவில்லை.

* எனக்கு போட்டியாக இந்தியாவில் எந்த கட்சியும் இல்லை.


*பூமிக்காக அரசியல் பேசும் ஒரே தலைவன் நான் தான்.

* பரந்தூரில் விமான நிலையம் கட்ட வேண்டும் என்பது பேராசை.

இவ்வாறு அவர் கூறினார்.

## Euro kids பள்ளியில் 2-ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு நடனங்கள், பேச்சுப்போட்டி



சென்னை, ஜன.25:

சென்னை சோழிங்கநல்லூர் ECR link Road -ல் Euro kids பள்ளியில் 2-ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு நடனங்கள், பேச்சுப்போட்டி நடைபெற்றது.

பிள்ளைகள் அனைவரும் வெகு சிறப்பாக நடனங்கள் ஆடி மகிழ்ந்தார்கள். பள்ளி ஆசிரியர்கள் அனை வரும் கலந்துகொண்டு பிள்ளைகளை பாராட்டி பரிசுகளும் வழங்கினார்கள்.

பள்ளி குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அனை வருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது. வெகு சிறப்பாக செய்திருந்தார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தர்ஷினி கலைக்கூடத்தில் பயின்று பென்சில் ஷேடிங்கில் தேர்வான ஷ்யாம் சுந்தருக்கு நிறுவனர் தர்மலிங்கம் சான்றிதழ் வழங்கினார்



தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மியூசிக் அன்ட் பைன் ஆர்ட் யூனிவர்சிட்டி தேர்வில், சென்னை கோடம்பாக்கம் ஸ்ரீ தர்சினி கலைக்கூடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு, கலைக்கூடத்தின் நிறுவனர் தர்மலிங்கம் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார், தர்ஷினி கலைக்கூடத்தில் பயின்று பென்சில் ஷேடிங்கில் தேர்வான ஷ்யாம் சுந்தர் சான்றிதழ் பெற்றுக்கொண்டார்,

## குடியரசு தின விழா கொண்டாட்டம் சென்னையில் 7,500 போலீசார் பாதுகாப்பு



சென்னை, ஜன.25:

குடியரசு தினத்தை முன்னிட்டு, தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மெரினா காமராஜர் சாலை-வாலாஜா சாலை சந்திப்பில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே தேசிய கொடியை ஏற்றி வைக்கிறார்.

இதனையொட்டி காமராஜர் சாலை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சென்னை போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவின் பேரில் கூடுதல் ஆணையாளர்களின் இணை ஆணையாளர்களின் நேரடி மேற்பார்வையில், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் என மொத்தம் 7,500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

சென்னை விமான நிலையம், ரெயில் நிலையங்கள், பஸ் முனையங்கள் மற்றும் பஸ் நிலையங்கள், மற்றும் அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் கூடுதலாக போலீசார் நியமிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள அனைத்து தங்கும் விடுதிகள் மற்றும் ஓட்டல்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சந்தேக நபர்களின் நடமாட்டம் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால் காவல்துறைக்கு தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தவிர சென்னை பெருநகர் முழுவதும் அந்தந்த காவல் சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாகனங்கள் மூலம் ரோந்து பணிகளும் தீவிரபடுத்தப்பட உள்ளன.

மக்கள் அதிகம் கூடும் இடங்களான மீனம்பாக்கம் விமான நிலையம், சென்னை சென்ட்ரல் உட்பட அனைத்து முக்கிய இடங்களிலும், சென்னை பாதுகாப்பு பிரிவின் காவல் அதிகாரிகள் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழத்தல் பிரிவு மோப்பநாய் பிரிவு மற்றும் மெரினா கடற்கரை பகுதியில் கடலோர பாதுகாப்பு படை பிரிவினருடன் இணைந்து நாசவேலை தடுப்பு சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், குடியரசு தினத்தை முன்னிட்டு நாளையும், நாளை மறுநாளும் மெரினா கடற்கரையில் அமைந்துள்ள உழைப்பாளர் சிலை மற்றும் சுற்றியுள்ள பகுதிகள், ராஜ்பவன் முதல் மெரினா கடற்கரை வரை மற்றும் தமிழக முதலமைச்சரின் இல்லத்தில் இருந்து மெரினா கடற்கரை வரையில் செல்லும் வழித் தடங்கள் 'சிவப்பு மண்டலமாக' அறிவிக்கப்பட்டு உள்ளது.

அந்த பகுதிகளில் டிரோன் கேமராக்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி பொருட்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை மாநகர போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## தி.மு.க.வின் 5 ஆண்டு ஆட்சி காலத்தில் 50 சதவீதம் நல்லது நடந்திருக்கிறது - பிரேமலதா



தூத்துக்குடி, ஜன.24:

தே.மு.தி.க. பொதுச்செய லாளர் பிரேமலதா விஜயகாந்த் தமிழகம் முழுவதும் உள்ளம் தேடி இல்லம் நாடி என்ற தலைப்பில் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக இன்று தூத்துக்குடியில் பிரசாரத்தை மேற்கொள்கிறார். இதில் கலந்து கொள்வதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வந்தார். விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் பிப்ரவரி 3-ந் தேதி வரை சுற்றுப்பயணம் இருக்கிறது. கூட்டணி குறித்து கூறுவதற்கு நேரம் இருக்கிறது. பிப்ரவரி 20-ந் தேதிக்கு பின்பு தான் தேர்தல் தேதி அறிவிக்க இருக்கிறது. அதனால் உரிய நேரத்தில் நல்ல முடிவை எடுத்து தலைமைக் கழகத்தில் அறிவிப்பேன்.

தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு எதிர்காலத்தில் எந்த கூட்டணி நல்லதோ, மாவட்ட செயலாளர்கள், கழக நிர்வாகிகள் யாரை அதிகம் விரும்புகிறார்களோ, தே.மு. தி.க.விற்கு எதிர்காலத்திற்கு எது நல்லதோ அந்த வகையில் தாயாக இருந்து கழகத்தை கட்டிக்காக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு என்னுடையது இந்த கடமையை கேப்டன் கையில் கொடுத்து இருக்கிறார். சரியான நேரத்தில் கூட்டணியை அறிவிப்பேன். பிரதமர் அவருடைய கூட்டணி கட்சி மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கின்றார். அவருடைய கூட்டணி சார்பாக பங்கேற்று இருக்கின்றார்.

விஜய் படத்திற்கு தொடர்ந்து இடையூறுகள் வருவது குறித்து கேட்கிறீர்கள். படத்தில் ஏதேனும் இருக்கிறதா? என்று உரியவரான விஜய் தான் பதில் சொல்ல வேண்டும். சட்டம் தன் கடமையை செய்யும் அதைத்தான் நான் சொல்கிறேன்.

தி.மு.க. 5 ஆண்டு காலத்தில் திட்டங்கள் நிறைவேற்றவில்லை என்று மக்களிடம் கருத்து இருக்கிறது. பல தடவை எந்த மார்க் என்று நான் கூறி இருக்கின்றேன். 50 சதவீதம் நல்லது நடந்து இருக்கிறது. நடக்க வேண்டியதும் இருக்கின்றது. எல்லா காலத்திலும் போராட்டம் இருக்க தான் செய்கின்றது. இடைநிலை ஆசிரியர்கள், சத்துணவு ஊழியர்கள், செவிலியர்கள் எல்லோரின் கோரிக்கைகள் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு முன்னேற்பாடு பணிகள் தீவிரம்



தஞ்சாவூர், ஜன.25:

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் வருகிற 26-ந்தேதி தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. தலைமையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" என்ற தலைப்பில் தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது.

இதையடுத்து மாநாட்டுக்கான முன்னேற்பாடு பணிகள் தி.மு.க. முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு மேற்பார்வையில் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் அமைச்சர் கே.என்.நேரு முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்த்து ஆய்வு செய்தார்.

மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மேலும் இந்த மாநாட்டில் அமைச்சர்கள் துரைமுருகன், ஐ.பெரியசாமி, மு.பெ.சாமிநாதன், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், துணை பொதுச்செயலாளர் பொன்முடி, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன் உள்பட பலர் பங்கேற்று பேச உள்ளனர்.

200 ஏக்கரில் மிக பிரமாண்டமாக இந்த மாநாடு நடக்கிறது. 100 ஏக்கரில் மாநாட்டிற்கான பந்தல் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. 100 ஏக்கரில் வாகனங்கள் நிறுத்த பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது.

மாநாடு நடக்கும் திடல் முழுமையாக தூய்மைப் படுத்தப்பட்டு பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.


மாநாட்டு திடலில் தி.மு.க. கட்சி கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. இந்த மாநாட்டில் 1.25 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டில் பங்கேற்பவர்களுக்கு தட்டுப்பாடில்லாமல் தரமான குடிநீர் வசதி, 200-க்கும் அதிகமான மொபைல் கழிவறை வசதி, பஸ் வசதி என அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

மாநாட்டில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு கருப்பு, சிவப்பு நிறத்தில் சேலைகள், இளம் வயதினருக்கு சுடிதார் போன்றவை வழங்கப்பட உள்ளன.

மேலும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு கைப்பையில் நொறுக்கு தீனிகளும் வழங்கப்பட உள்ளன. இதில் கேக், மிக்சர், குடிநீர் பாட்டில், பிஸ்கட், ஹாட்பாக்சில் பிரியாணி போன்றவை இருக்கும் என்று தெரிய வந்துள்ளது.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ..
Residential / Commercial ..
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER NOW
2026 CALENDAR
RS.100
MANJALMART.COM
9337501889
7789941009


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com



SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


S.R
Call Drivers Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009

## கவிதை அரங்கம்!




உன்னுடைய முதல்
வெற்றி எது தெரியுமா
உன்னை நீ இரசிப்பது
உன்னை நீ மதிப்பது
உன் மீது நீ
நம்பிக்கை கொள்வது

வாழ்க்கையில் ஏற்படும்
இருளை புன்னகையுடன்
கடந்து செல்
வாழ்க்கை பிரகாசிக்கும்

வாழ்க்கையை நீங்கள்
ஒரு சாத்தியமாகப்
பார்த்தால் எங்கும்
சாத்தியங்களையே
காண்பீர்கள்

## வாழ்க்கை தத்துவம்...



வாழும் ஒவ்வொரு நாளும்
ஒரு பாடமே
புரிந்து கொண்டால்
வாழ்க்கை ஒரு கவிதை

சின்ன சிரிப்புகள் கூட
பெரும் சுமைகளை
சுமக்க உதவுகின்றன

கடலுக்குள் மட்டுமே ஆழம் இல்லை
சில வாழ்க்கைகளும் அளவுக்கடந்த
ஆழத்தில் நடக்கின்றன

சத்தமில்லாமல் சோர்வடையும் மனது
ஒரு கவிதையாகவே மாறுகிறது

## அவசர புத்தி...

"மூன்று லட்சம் இருந்தா சென்றிங் போட்டு மூடி விடலாம்" என கொத்தனார் சொல்லவும் ரமேஷ் யோசித்தான் மூன்று லட்சம் எப்படி புரட்டுவது சொந்தம் பந்தம் எல்லாம் ஒரு வேலை சாப்பாடு போடுவதற்கே யோசிப்பார்கள் மூன்று லட்சமா.... மயக்கம் போட்டு விடுவார்கள் "மனைவியின் நகையை கேட்டு வாங்கி வங்கியில் வைத்து கொத்தனார் கேட்ட மூன்று லட்சத்தைக் கொடுத்து வேலை பார்க்கனும்" என எண்ணியபடி வீட்டிற்கு சென்றான் ரமேஷ்

"அத்தாட்சி மூனு லட்சம் பணம் இருந்தா கொடுங்களே... கட்டிய வீட்டை குறையா போடக் கூடாதாம்" என உறவுக்கார அண்ணன் மனைவிடம் கேட்க, "ஏன்டி என்ன நக்கல இருக்கா இப்ப நா இருக்கிற நிலமையில வட்டிக்கு பணமா கொடுத்து வாங்குறேன் போடி இவளே..."எனச் சொல்லி விலகி கடைக்குச் சென்றாள் பாக்கியம்

"அத்தாட்சியும் கையை விரிச்சுட்டாங்க இருக்குற நகை நட்டை வச்சாவது குறைவேலையை முடிக்கச் சொல்லனும்" என மனதில் யோசனை செய்தபடி கட்டிட வாசல் ஓரமாக அமர்ந்து கொண்டு மகனை எதிர்ப் பார்த்துக் கொண்டு இருந்தாள் மரகதம்

அப்போது கொத்தனார் ஒரு குடம் தண்ணீ கொண்டு வாங்கம்மா.... என்று அழைக்கவும் மரகதம் குடத்தை குழாயில் தண்ணீர் பிடித்து கட்டிடத்திற்குள் சென்று கொடுத்தாள்

கடைக்கு போன பாக்கியம் சேலைக்குள் மஞ்சப் பையை மறைத்து வைத்து கொண்டு வீட்டிற்குள் போனாள்

பால் வண்டி மணிச் சத்தம் கேட்கவும் வீட்டிற்குள் போன பாக்கியம் தூக்கு வாளியுடன் வேகமாக வந்தவள் தெருவில் இருபக்கமும் பார்த்தவள் கொஞ்சம் தூரத்தில் பால்க்காரன் பால் ஊற்றுவதைப் பார்த்ததும் அந்தப் பக்கமாக சென்றாள் பாக்கியம்

இரு சக்கர வாகனத்தில் ரமேஷ் வந்தவன் "அம்மா.... அம்மா...."என அழைக்க கட்டிடத்தில் இருந்து மகன் அழைப்புக் குரல் கேட்டு வந்தவள் அம்மா.. பொண்டாட்டி நகையை பேங்கில் வச்சு மூனு லட்சம் கேட்டேன் வட்டி , வரின்னு போக மிச்சம் கொடுத்தாங்க ன்னு சொல்ல

மிச்சம்ன்னா எவ்வளவு "அம்மா கேட்டாள்

மூனு லட்சத்திற்கு ஐந்தாயிரம் கம்மியா இருக்கும் அஞ்சு, பத்து செலவுக்கு வச்சுகிட்டு கொத்தனாருட்ட கொடுக்கலாம் என்று சொல்லியவன் நா போயி டீ வாங்கிட்டு வந்துறேன்னு" இரு சக்கர வாகனத்தில் சென்றான்

பாக்கியத்தைப் பார்க்க வீடு வரைக்கும் சென்று பார்த்த மரகதம் அத்தாட்சி என அழைத்து பார்த்தாள் யாரும் இல்லாததைப் பார்த்து கட்டிடத்துக்கு திரும்பி வந்து உள்ளே சென்றாள் மரகதம் மஞ்சப்பையுடன் கட்டிடத்துக்குள் மரகதம் சென்றதை கவனித்த பாக்கியம்

வீட்டிற்குள் வந்து பாலை அடிப்பின் மேல் வைத்து விட்டு பிரோவை திறந்து பார்த்தாள் பாக்கியம் பட படன்னு வரவும் கொஞ்சம் ஆசுவாசப் படித்திக் கொண்டு நிதானமாய் பார்த்தாள் மஞ்சப் பையயோடு பணத்தைக் காணவில்லை

சற்று முன் மரகதம் மஞ்சப் பையோடு கட்டிடத்துக்குள் சென்றதைப் பார்த்த ஞாபகம் வந்தது

"அடிப்பாவி நா எப்படியோ பணத்தோடு வந்ததைப் பார்த்து விட்டு பால் வாங்கப் போன சமயம் பார்த்து பிரோவுக்குள் வைத்த பணத்தை எடுத்துட்டு போய் இருக்காளே இவளுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இவள் சும்மா விடுவேன் திருட்டு முண்டே நீ வீடு கட்டறதுக்கு எவ வீட்டு பணத்தை திருடுவே "ன்னு மனசுக்குள் பொரிந்த வாறு வேகமாக மரகதம் கட்டிடத்திற்கு வந்தாள் பாக்கியம்

அப்போ "கொத்தனாரண்ணே முனு லட்சத்திற்கு பத்தாயிரம் கம்மியா இருக்கு வாங்கிட்டு சென்டரிங் போட்டிருங்கண்ணே" என்று சொல்லிக் கொண்டு இருந்ததை கேட்டு

"ஏண்டி திருட்டு நாயே யாரு விட்டு பணத்தை எடுத்துக் கொடுப்பே "ன்னு பாக்கியம் கத்தினாள்

என்ன என்னாச்சு என்ன சொல்றிங்க" ன்னு எதுவும் தெரியாதவளாய் மரகதம் கேட்க

"அடியே, பசப்பி சும்மா தெரியாத மாதிரி நடிக்காதே டி" என்றாள் பாக்கியம்

"நா பால் வாங்க போன சமயமா பார்த்து பிரோவ்ல வச்சுட்டு வந்த பணத்தை எடுத்து வந்துட்டியே டி 'என்று கத்தவும்

தெருவில் உள்ளவர்கள் எல்லோரும் பாக்கியத்திற்கு சார்பாக பேசத் தொடங்கினார்கள்

"அத்தாட்சி அத்தாட்சி கொளஞ்சு கொளஞ்சு பேசிட்டு வீட்டுக்குள்ளே போயி பிரோவ்ல இருந்த பணத்தை திருடிக் கிட்டு வந்திருப்பே,நலல வேல உடனே பார்த்திட்டே பாக்கியம் பேசாமா போலீஸ் கிட்டே சொல்லி நாலு சாத்து சாத்தச் சொல்லு "என சொல்லவும்

"மரகதம் ஏண்டி சிருக்கிகளா நா பணத்தை எடுத்தத நீங்க பார்த்த மாதிரி பேசுறிங்க

அத்தாட்சி தா எங்கோ மறந்து வச்சுட்டு இங்கே வந்து புலம்புது அத்தாட்சி நல்ல வீட்ல தேடுங்க" ன்னு மரகதம் சொல்ல

"இல்லே பிரோவ்ல வச்ச மஞ்சப்பைய இல்லே நீ? தாண்டி எடுத்துட்டு வந்துருக்கே இப்பத்தான் டி பேங்க்ல போய் முனு லட்சம் எடுத்துட்டு வந்தேன்" பாக்கியம் சொல்லிக் கொண்டே

" மரகதம் என் கிட்டே விளையாடதே பேசம அந்த பணத்தை கொடுத்துரு" "என்றாள்

அத்தாட்சி இதுல முனு லட்சம் இல்லே பொண்டாட்டிட நகை வாங்கி பேங்க்ல போயி அடமானம் வச்சு வட்டி அஞ்சாயிரம் போக மிச்சம் பணம் தான் என்றாள் மரகதம் அடியே அதுக்கு அஞ்சாயிரத்த அமுக்கிட்டியா ன்னு சொல்லிக்கொண்டே அந்த பணத்தைக் கொடுடி" என்றாள்

அப்போது டீ வாங்கிக்கொண்டு வந்த ரமேஷ் கட்டிடத்தின் கூட்டத்தைப் பார்த்து உள்ளே வந்தவன் "என்னம்மா என்ன பிரச்சனை" என்று கேட்கவும்

"வாடா ரமேஷ் அத்தை விட்டு பணத்தை நா திருடிட்டேன்னு சொல்லி நீ கொடுத்துட்டு போன பணத்தை கேட்கிறாங்க டா" ன்னு சொல்லவும்

சட்டைப்பையில் இருந்த நகை அடமானச் சிட்டையை எடுத்து காண்பித்தான்

"இந்தா பாருங்க பேங்க்ல நகையை வச்சு பணம் வாங்கிட்டு வந்த ரசீது" என நீட்டவும்,

"அப்போ நா பீரோவுல வச்ச பணம் "எனச் சொல்லிக் கொண்டே பாக்கியம் வீட்டிற்கு போனாள் பிரோவிலிருந்ததை எல்லாம் சேலைத் துணிகளை எல்லாம் உதறிப் பார்த்தாள்

"பணமுள்ள மஞ்சப்பை காணவில்லை எங்கே போச்சு எங்கே போச்சு "என பிதற்றத் தொடங்கினாள்

"அத்தே வீட்டுக்குள்ளதா வச்சுங்களா... "ன்னு சொல்லி கொண்டே பிரோ கதவை சாத்தியவன் பிரோ பக்கத்தில் ஆணியில் மாட்டி இருந்த பையை எடுத்து "இதுவா அத்தேன்"னு கேட்கவும்

ரமேஷிடமிருந்து மஞ்சப் பையை பிடிங்கி வேகமாக திறந்தாள் ஐநூறு ரூபாய் பணக்கட்டு பாக்கியத்தைப் பார்த்து ஈ......ன்னு இளிக்கவும் முகமலர்ந்தாள் பாக்கியம்

**நல.ஞானபண்டிதன்**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*“உங்க நாயை அடக்கி வையுங்க. என் பெண் பாட ஆரம்பித்ததும் அது குறைக்க தொடங்கிவிடுகிறது.”*

*“அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உங்கள் பெண்தானே முதலில் ஆரம்பிக்கிறாள்?”*

## தினம் ஒரு சமையல்



# இறால் சில்லி 65

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| இறால் | - அரை கிலோ |
| அரிசிமாவு | - 2 கை |
| சோளமாவு | - 1 கை |
| மைதா | - 1 கை |
| முட்டை | - 1 |
| இஞ்சி, பூண்டு விழுது | - 1 தேக்கரண்டி |
| எலுமிச்சம் பழச்சாறு | - 1 டேபிள் ஸ்பூன் |
| சீரகப்பொடி | - அரை தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | - 1 கொத்து |
| காய்ந்த மிளகாய் | - 3 தேக்கரண்டி |
| மஞ்சள்தூள் | - 1/4 தேக்கரண்டி |
| தனியாத்தூள் | - 1 தேக்கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |

**செய்முறை:**



1. இறாலைச் சுத்தம் செய்து எடுத்துக் கொள்ளவும். அரைத்த அரிசி மாவு, சோளமாவு, மைதா, மஞ்சள்தூள் அரைத்த மிளகாய், இஞ்சி-பூண்டு விழுது, தனியாத்தூள், சீரகப்பொடி, கறிவேப்பிலை, தேவைக்கேற்ப உப்பு, எலுமிச்சம் பழச்சாறு அனைத்தையும் நீர் தெளித்து பேஸ்ட் பதத்தில் பிசைந்து கொள்ளவும். இறாலை இக்கலவையில் புரட்டி காய்ந்த எண்ணையில் போட்டு பொரித்து எடுக்கவும்.

## புரங்கம் பயன்கள்



சாலையோரங்களில் நிழலுக்காக வளர்க்கப்படுபவை புங்க மரங்கள். பளபளப்பான கரும்பச்சை இலைகளையும், இளஞ்சிவப்பும் வெண்மையும் கலந்த நெற்பொரி போன்ற பூக்களையும், நீள் சதுர காய்களையும் உடைய மரம் இது. கடற்கரையிலும் ஆற்றங்கரையிலும் தானே வளர்வது. தினசரி சாலையோரங்களில் இவற்றைப் பார்க்கும் நாம், இதன் மருத்துவப் பயன்களை பற்றி அறிந்ததில்லை. அதனைக் குறித்து இனிக் காண்போம்.

புங்க மரத்தின் இலை, பூ, காய், விதை, வேர் என அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை. இவை சரும நோய்களைப் போக்கும் மிகச் சிறந்த மருந்தாகும். புங்கம் வேர்பட்டைச் சாறு (புங்கம் பால்) நோய் நீக்கி உடலைத் தேற்றவும், சதை, நரம்புகளை சுருங்கச் செய்யவும், தாதுக்கள் அழுகுவதை தடுக்கவும் பயன்படுத்தலாம்.

புங்கம் பூ, புளியம்பூ, பூண்டு, சீரகம், நன்னாரி வேர், வசம்பு, வெப்பாலை அரிசி இவற்றை இடித்து பசும்பாலில் அரைத்துக் கலக்கி நல்லெண்ணெய் கலந்து பதமாக காய்ச்சி வடித்து அரை அல்லது ஒரு தேக்கரண்டி காலை மட்டும் ஒரு மண்டலம் சாப்பிட, அனைத்துக் கரப்பான், சரும நோய்கள் தீரும். புங்கம் பூவை நிழலில் உலர்த்தி நெய்யில் வறுத்து பொடி செய்து அரை தேக்கரண்டி காலை, மாலை இரண்டு அல்லது மூன்று மண்டலம் தேனில் சாப்பிட 20 வகை மேக நோயும் நீங்கும்.

புங்கம், புளி, மா, வேம்பு, கறிவேம்பு ஆகியவற்றின் இலை, சுக்கு, மிளகு, சீரகம், இந்துப்பு இவற்றை ஒரு லிட்டர் நீரிலிட்டு அரை லிட்டராகக் காய்ச்சி 50 மில்லியாக காலை, மாலை கொடுத்து வர மாந்தம், உள்சூடு, பித்த சுரம் ஆகியவை தீரும். குழந்தைகளுக்கு இதை பாதி அளவாகக் கொடுக்கலாம். புறணி நீக்கிய புங்கம் வேர் பட்டையை இடித்துப் பிழிந்த பாலுடன் சம அளவு தேங்காய் பால் சேர்த்து காய்ச்சி எண்ணெய் பிரியும் பதத்தில் வடித்து, பஞ்சில் நனைத்து பிளவை, ஆறாத புண்கள் ஆகியவற்றுக்கு போட்டு வர அவை விரைவில் ஆறும்.

புங்கம் வேர், சிற்றாமணக்கு வேர், சங்கம் வேர் இவற்றை எடுத்து அரை லிட்டர் பூண்டு சாற்றுடன் 2 லிட்டர் விளக்கெண்ணெயில் கலந்து அதில் வாதமடக்கி வேர் பட்டை, கடுகு ரோகிணி பொடித்துப் போட்டு கலந்து 15 நாட்கள் வெயிலில் வைத்து வடிகட்டி காலை மட்டும் ஒரு தேக்கரண்டி கொடுத்து வர எவ்வித சரும நோயும், கரப்பான், சொறி, சிரங்கு, புண் புரைகளும் தீரும்.

இந்த வைத்திய முறைகளை முக்கியமாக ஒரு வைத்தியரிடம் இதன் மருத்துவ பலன்களை கலந்து ஆலோசித்து அதன்படி எடுத்துக் கொண்டால் உடல் நோய் விரைவில் குணமாகும்!

## ரீ ரிலீஸில் முதல் நாள் மங்காத்தா படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா



எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் நேற்று ரீ ரிலீஸான மங்காத்தா படத்திற்கு சிறப்பான வரவேற்பு கிடைத்தது.

இந்த நிலையில், ரீ ரிலீஸில் முதல் நாள் மங்காத்தா படம் எவ்வளவு வசூல் செய்துள்ளது என்பது குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, முதல் நாள் இந்திய அளவில் ரூ. 5.50 கோடி வசூல் செய்துள்ளது. இதில், தமிழ்நாட்டில் மட்டுமே ரூ. 5 கோடி வசூலித்துள்ளது.

இதுவரை தமிழ் சினிமாவில் ரீ ரிலீஸான படங்களிலேயே முதல் நாள் அதிக வசூல் செய்த படம் என்கிற சாதனையை மங்காத்தா படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அஜித் – வெங்கட் பிரபு கூட்டணியில் உருவாகி 2011ஆம் ஆண்டு வெளிவந்த படம் மங்காத்தா. இப்படம் வெளிவந்து கிட்டத்தட்ட 15ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், ரீ ரிலீஸ் செய்துள்ளனர்.

அஜித் ரசிகர்கள் எப்போது மங்காத்தா படம் ரீ ரிலீஸ் ஆகும் என்றுதான் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர். அவர்களுடைய

## சினிமா



சாரா அர்ஜுன் தெய்வத்திருமகள் உட்பட ஏராளமான படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர். அவர் தற்போது Euphoria என்ற தெலுங்கு படத்தில் நடித்து இருக்கிறார். அதன் ப்ரோமோஷன் நிகழ்ச்சிக்கு அவர் சேலையில் அழகாக வந்திருக்கும் புகைப்படங்கள் இதோ.

## கிஷோரின் ‘மெல்லிசை’ படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



இயக்குநர் தீரவ் இயக்கத்தில் கிஷோர் கதாநாயகனாக நடித்துள்ள படம், ‘மெல்லிசை’. தனன்யா, சுபத்ரா ராபர்ட், ஜார்ஜ் மரியன், ஹரிஷ் உத்தமன், ஜஸ்வந்த் மணிகண்டன் உள்பட பலர் நடித்துள்ளனர்.

இப்படத்தை ‘வெப்பம் குளிர் மழை’யைத் தயாரித்த ஹேஷ்டேக் எஃப்டிஎஃப்எஸ் புரொடக் ஷன்ஸ் தயாரித்துள்ளது. இப்படம் அப்பா-மகள் இடையேயான உறவைப் பிரதிபலிக்கும் கதை கொண்டது. இதனிடையே, சில தினங்களுக்கு முன் ‘மெல்லிசை’ படத்தின் இரு பாடல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது.

இந்த நிலையில், ‘மெல்லிசை’ வருகிற 30-ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

# நாக தோஷ பரிகாரம் பற்றிய சிறப்பு தகவல்கள்

ராகு, கேது தோஷத்தால் கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள நாக தோஷ பரிகாரம் பற்றிய சிறப்பு தகவல்களை படித்து பலன் பெறலாம்.

1. “கால சர்ப்பயோகம் கொண்ட ஜாதகர்கள், ராகு காயத்திரியையும் கேது காயத்திரியையும் ஆயுள் முடியுமட்டும் தினமும் தங்களால் முடிந்த அளவு ஜபித்துக் கொண்டே வருவது மிகச் சிறந்த பரிகாரம்.

2. ஜோதிட சாஸ்திரத்தில் நிழற்கிரகங்கள் என்று ராகு கேதுவை வர்ணக்கப்பட்டாலும் இவர்கள் இரண்டு பேரும் சனி பகவானின் பிரதிநிதிகளாகத் திகழ்கிறார்கள்.

3. கிரந்தங்களிலும் பல்வேறு ஓலை சுவடிகளிலும் ராகு-கேதுவின் பெருமைகளைப் பற்றியும் அவர்கள் ஒவ்வொரு ராசிகளில் சஞ்சரிக்கும்போது என்ன என்ன செய்வார்கள் என்பதைப் பற்றி நிறைய செய்திகள் உள்ளன.

4. ஜாதகத்தில் லக்னத்தில் இருந்து 1, 5, 9 இந்த ஸ்தானங்களில் சனி, ராகு, கேது, போன்ற கிரகங்கள் இருக்கும் பொழுது அது நாகதோஷம் உடைய ஜாதகமாகிறது.

5. நாக தோஷம் உடையவர்களுக்கு உடலில் ஏதோ ஒரு இடத்தில் நாகம் போன்ற உருவம் கொண்ட மச்சமோ, அல்லது தழும்போ இருக்கும் என்று சொல்வதில் உண்மை இல்லை.

6. ஜாதகத்திலே நாக தோஷம் இருப்பவர்களுக்கு நான்கு, பதி மூன்று, இருபத்தி இரண்டு, முப்பத்தி ஒன்று, இந்த தேதியில் பிறந்தவர்களுக்கும், அல்லது பெயரின் கூட்டு எண் நான்கு வந்தாலும், இவர்களுடைய கண்களுக்கு பாம்புகள் அடிக்கடி தென்படும்.

7. நாக தோஷங்கள் எதனால் ஏற்படுகிறது என்று பார்த்தால் முன் ஜென்மத்தில் ஆண் நாகமும், பெண் நாகமும் ஒன்றாக இணைந்து இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால், இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஏழாம் இடத்தில் ராகு என்ற கருநாகம் நின்று கணவனுக்கு தோஷத்தை எற்படுத்தும்.

8. பாம்பு தன்னுடைய பசிக்காக இரையை தேடி செல்லும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் தொழில் ஸ்தானமான லக்னத்துக்கு பத்தாம் இடத்தில் ராகுவோ, கேதுவோ நின்று, தொழில் ஸ்தானத்துக்கு தோஷத்தை உருவாக்கும்.

9. பாம்பு முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காலத்திலும், அல்லது தனது குட்டிகளுடன் ஒன்றாக இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஐந்தாம் இடமான புத்திர ஸ்தானத்தில், ராகுவோ, கேதுவோ நின்று நாக தோஷத்தை ஏற்படுத்தும்.

10. புராண காலங்களில் நாகதோஷம் எதற்காக பார்க்கப்பட்டது என்றால், ஒருவர் சன்னியாசம் பெற்று காடுகளிலும், மலைகளிலும், கடுமையான தவங்கள் செய்வதற்கு கடுமையான விஷ ஜந்துகளினால் இவருக்கு ஆபத்து ஏற்படுமா என்பதை அறிந்த பின்னரே அவருக்கு சன்னியாசம் கொடுக்கப்பட்டது. நாக தோஷம் இதற்காகத்தான் பார்க்கப்பட்டது. நாளடைவில் அது ஒரு பயப்படக் கூடிய தோஷமாக பார்க்கப்பட்டது.



11. கும்ப கோணத்தில் இருக்கும் திருநாகேஸ்வரம், ஆந்திர மாநிலத்தில் திருப்பதிக்கு அருகில் உள்ள திருகாளகஸ்தி, சென்னை அருகில் உள்ள கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு, சென்று வணங்கி வருவது நாக தோஷங்களை நீக்கும் பரிகாரமாகும்.

12. ஒவ்வொரு மாதமும் திரியோதசி திதியன்று, சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு நடைபெறுகிறது. பிரதோஷ வேளையில் மாலை 4.30 மணியில் இருந்து 6 மணிக்குள் இவ்வழிபாடு நடைபெறும். ராகு கேதுவால் ஏற்படும் நாக தோஷத்தை போக்க இது சிறந்த வழிபாடாகும்.

13. சர்ப்ப பரிகாரங்கள் செய்யும்போது மிகுந்த ஆசாரத்துடன் செய்ய வேண்டும். சைவ உணவு விரதம் மேற்கொள்ள வேண்டும். தான தர்மங்களை மனம் கோணாமல், மனமுவந்து நம்மால் முடிந்த அளவு செய்ய வேண்டும்.



14. நாகப் பிரதிஷ்டம் என்பது ஆண் பாம்பும் பெண் பாம்பும், நாகப்பாம்பும், சாரைப் பாம்பும் இணைவது போன்று கல்லில் வடித்து அரசும், வேம்பும் சேர்ந்திருக்கும் இடத்தில் பிரதிஷ்டை செய்தால் விசேஷம் என்று மனுநீதி என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.

15. திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் கோமதி அம்மன் ஆலயம் உள்ளது. நாக தோஷம் உள்ளவர்கள் இந்தக் கோவிலுக்கு வெள்ளிக்கிழமை அன்று வந்து பாம்பு புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபடுகின்றனர். இவ்வாறு 11 வாரம் தொடர்ந்து புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபட்டு வந்தால் நாக தோஷத்தால் தடைப்பட்டு வரும் திருமணம் விரையில் நடைபெறும்.

16. ராமேஸ்வரம் சென்று மூன்று நாள் தங்கி கடலில் நீராடி ராமலிங்க சுவாமியை வணங்கி வந்தால் கர்ப்ப தோஷம் பரிகாரமடைந்து புத்திரர் பிறப்பார்கள்.

17. தங்கம் அல்லது வெள்ளி சிறு ஐந்து தலை நாகம் செய்து வீட்டில் வைத்து நாற்பது நாள்கள் பாலபிஷேகம் செய்து, பூசித்து பிறகு ஒருவருக்கு புது வேட்டி துண்டு தாம்பூலம் தட்சணையுடன் நாக விக்கிரகத்தையும் தானம் செய்யலாம்.

18. கருங்கல்லில் நாகப் பிரதிஷ்டை செய்து ஆறு, குணம் அருகில் வைத்து நாற்பது நாள்கள் பாலபிஷேகத்துடன் பூசித்து தினமும் 108 முறை வலம் வந்தால் நாக தோஷம் நிவர்த்தியாகும்.

19. இரண்டு நாகங்கள் பின்னிக் கொண்டு ஒன்றின் முகத்தை ஒன்று பார்க்குமாறு கல்லில் வடித்து அரசமரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள்கள் விளக்கேற்றி வைத்து பூசித்தால் நாகதோஷம் விலகும்.

20. கண்ணன் நடனமாடுவது போலவும், அவனுக்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போலவும் கல்லில் வடித்து வேம்பும் அரசும் இணைந்திருக்கும் குளக்கரையில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள் விளக்கேற்றி வலம் வந்து வணங்கினால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.

21. சிவலிங்கத்திற்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போல் சிலை வடித்து நதிக்கரை அல்லது, குளக்கரையில் பிரதிஷ்டை செய்து, நாற்பது நாள் பூசித்து வலம் வந்தால் நாகதோஷம் பரிகாரமாகும்.

22. குளம் அல்லது நதிக்கரையில் அரசு, வேம்பு கன்றுகளை நட்டு, முறையாகத் திருமணம் செய்து குறைந்தது நூறு தம்பதிகளுக்கு விருந்தும் தட்சணை தாம்பூலம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகி புத்திரர்கள் பிறப்பதுடன் வாழ்க்கையும் இன்பமாக அமையும்.

23. வசதி உள்ளவர்கள் ஓர் ஏழைக்கு பயிர் நிலம் வாங்கி தானம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.

24. ராகு காலத்தில் பாம்புப் புற்றுக்கு முட்டை, பால் வைத்து வழிபாடு செய்வது நற்பலன்களை உண்டாக்கும்.

25. கோமேதகக் கல் வைத்த மோதிரம் அணியலாம். இதனால் ராகுவினால் உண்டாகும் அசுப பலன்கள் குறையும்.
தினசரி வலம் வர வேண்டும். பிரச்சனையின் தீவிரத்திற்கு ஏற்ப 9, 27, 108 என சுற்றுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து இவ்வாறு 48 நாட்கள் வலம் வர தோஷங்கள் யாவும் நீங்கும்.

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி-620015

## தினம் ஒரு தலைவர்கள்

# நாராயண் பலேகர் வரலாறு

நாராயண் பலேகர் (23 ஜூலை 1927 - 25 ஜூலை 2006) கோவா விடுதலை இயக்கத்தில் பங்கேற்ற ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்தார். அவர் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் (AI-TUC) கோவா மாநில கவுன்சிலின் தலைவராக இருந்தார். அவர் கோவா மக்கள் கட்சியின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார், அதன் சில உறுப்பினர்கள் பின்னர் கோவாவில் ஜார்ஜ் வாஸ் மற்றும் எஸ். ஏ. டாங்கே ஆகியோருடன் சேர்ந்து CPI ஐ உருவாக்கினர்.

ஆரம்பகால வாழ்க்கை நாராயண் விட்டல் பலேகர் ஜூலை 23, 1927 அன்று போர்த்துகீசிய கோவாவின் சால்செட் தாலுகாவில் உள்ள டிராமபூரில் விட்டல் நாராயண் பலேகருக்குப் பிறந்தார். அவர் தனது முதுகலைப் பட்டத்தையும் எல்.எல்.பி.யையும் முடித்தார்.

தேசியவாத இயக்கம் 1946 ஆம் ஆண்டில், பலேகர் மற்றும் விஸ்வநாத் லாவண்டே ஆகியோர் கோவா வெல்ஹாவில் ஒரு சிறிய குழுவை உருவாக்கினர், அவர்கள் தேசபக்தி பாடல்கள் மற்றும் போவாடாக்களைப் பாடினர். 1946 நவம்பர் 18 அன்று கோவா வெல்ஹாவின் மைனேயில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தபோது, பலேகர் சுமார் மூன்று வாரங்கள் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டார்.
1945 முதல் 1947 வரை, அவர் கோவாவில் எம்.என். ராயின் தீவிர ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக இருந்தார். 1947 மற்றும் 1948 க்கு இடையில், அவர் பம்பாயில் கட்சியில் சேர்ந்தார். கோவாவில் இருந்தபோது, அவர் 1946 இல் டி.பி. குன்ஹாவின் கோவா இளைஞர் கழகத்தில் சேர்ந்தார் மற்றும் 1946 மற்றும் 1948 க்கு இடையில் கோவாவின் தேசிய காங்கிரஸின் ஒரு பகுதியாக இருந்தார்.

1948 மற்றும் 1961 க்கு இடையில், பலேகர் கோவா மக்கள் கட்சியின் (GPP) ஒரு பகுதியாக இருந்தார். அவர் 1948 மற்றும் 1954 க்கு இடையில் செயலக உறுப்பினரானார், பின்னர் 1954 மற்றும் 1960 க்கு இடையில் அதன் பொதுச் செயலாளரானார்.

1954 ஆம் ஆண்டில், பலேகர், மரியோ ரோட்ரிக்ஸ் மற்றும் ஜார்ஜ் வாஸ் ஆகியோருடன் சேர்ந்து, நாகர் ஹவேலியில் 60 க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கைப்பற்ற ஜிபிபியின் தன்னார்வலர்களை வழிநடத்தினார். இது ஆசாத் கோமந்தக் தளத்தின் தன்னார்வலர்கள் மற்றும் கமாண்டோக்களால் முழுமையாக விடுவிக்கப்படுவதற்கு முன்பு நடந்தது. பலேகருக்கு எதிராக ஒரு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது, இதற்காக அவர் இல்லாதபோது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.



பலேகர் ஜெரால்ட் பெரேராவுடன் சேர்ந்து ஜிபிபியின் வெளியீடான கோன் ஏஜை எட்டு ஆண்டுகள் வெளியிட்டார். 1954 ஆம் ஆண்டில் சில காலம் ஜிபிபியின் தலைமையகத்தை பெல்காமுக்கு மாற்ற அவர் பணியாற்றினார், பின்னர் அதன் பொதுச் செயலாளரானார்.

பலேகர் போராட்டங்களை ஒழுங்கமைக்கவும் தேசியவாதிகளை வழிநடத்தவும் கோவாவுக்கு ரகசியமாக வருகை தருவார். வி.கே. சித்தாலே தலைமையிலான 1954 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தில், பலேகர் கோவா விமோச்சன் சஹாயக் சமிதியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

போர்த்துகீசிய காலனிகளை விடுவிப்பதற்கான முயற்சிகளுக்கு தலைமை தாங்கிய கோவா நடவடிக்கை கவுன்சிலின் உறுப்பினராக இருந்தார். விஜய் நடவடிக்கையின் போது, எல்லையில் உள்ள ராணுவ வீரர்களுக்கு பொதுமக்களின் ஆதரவை உருவாக்க உதவுவதற்காக ஒரு குடிமக்கள் குழுவை அவர் ஏற்பாடு செய்தார். டிசம்பர் 18, 1961 அன்று, ராணுவ வீரர்களுடன் கோவாவிற்குள் நுழைந்தார்.

கோவா விடுதலைக்குப் பிறகு பலேகர் பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சிலில் உறுப்பினரானார் மற்றும் கோவாவில் அதன் பொதுச் செயலாளராக இருந்தார். 1948 மற்றும் 1964 க்கு இடையில் பம்பாயில் அரசு ஊழியராகப் பணியாற்றியபோது, 1954 க்குப் பிறகு தொழிற்சங்கவாதியாகவும், சிபிஐ ஊழியராகவும் பணியாற்றினார்.

1989, 1991 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் சிபிஐ வேட்பாளராக தெற்கு கோவா மக்களவைத் தொகுதியில் இருந்து பலேகர் தேர்தல்களில் போட்டியிட்டார், ஆனால் வெற்றி பெறவில்லை.

PRGI No. TNBIL/25/A1569
வைகறையில் பேப்பர்பாய்
சென்னை ஞாயிற்றுக்கிழமை 25.01.2026

# புகையிலை மற்றும் நிகோடின் பொருட்களுக்கு முழுமையான தடை விதித்தது ஒடிசா அரசு!

**புவனேஷ்வர், ஜன.25:**

பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக புகையிலை மற்றும் நிகோடினை மூலப்பொருட்களாகக் கொண்ட அனைத்துப் பொருட்களின் உற்பத்தி, பதப்படுத்துதல், பேக்கேஜிங், சேமிப்பு, போக்குவரத்து, விநியோகம் மற்றும் விற்பனைக்கு அதிகாரபூர்வமாகத் தடை விதிப்பதாக ஒடிசா மாநில அரசு அறிவித்துள்ளது.

புகையிலை பயன்பாட்டினால் பாதிப்புகள் அதிகரித்து வருவதை தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஒடிசா அரசு தெரிவித்துள்ளது. ஒடிசா அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் அறிக்கையில், 'புகையிலை அல்லது நிகோடினை கொண்ட அனைத்துப் பொருட்களும், அவை பேக்கேஜ் செய்யப்பட்டவையாக இருந்தாலும் அல்லது பேக்கேஜ் செய்யப்படாதவையாக இருந்தாலும், தனித்தனியாக விற்கப்பட்டாலும் அல்லது கலந்து பயன்படுத்தும் வகையில் விற்கப்பட்டாலும், அவை எந்தப் பெயரில் சந்தைப்படுத்தப்பட்டாலும் இப்போது ஒடிசா மாநிலத்தில் தடை செய்யப்பட்டுள்ளன.

பான் மசாலா, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் பிற பதப்படுத்தப்பட்ட, நறுமணமூட்டப்பட்ட, சுவையூட்டப்பட்ட மசாலாப் பொருட்களுடன் புகையிலையை மெல்லும் பழக்கம் பரவலாகப் பயன்படுத்தப்படுவது பொது சுகாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கிறது. இது குழந்தைகள் மற்றும் இளம் வயதினரின் ஆரோக்கியத்திற்கு மிகவும் ஆபத்தானது.

புகையிலை, நிகோடின் பயன்பாடு வாய் ஆரோக்கியத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும் வாய், உணவுக்குழாய், வயிறு, கணையம், தொண்டை மற்றும் சிறுநீரகம் போன்றவற்றில் ஏற்படும் புற்றுநோய்களுடன் இது அதிகளவில் தொடர்புடையது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய வயது வந்தோர் புகையிலை கணக்கெடுப்பின் 2வது சுற்றின் முடிவுகளில், ஒடிசாவில் வயது வந்தோரில் 42% பேர் புகையிலையை மெல்லும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர் என்றும், இது தேசிய சராசரியை விட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகம் என்றும் தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

# மும்பையில் குடியிருப்பு வளாகத்தில் துப்பாக்கிச் சூடு: பாலிவுட் நடிகர் கைது

**மும்பை, ஜன.25:**

மும்பை அந்தேரியில் உள்ள ஓஷிவாரா குடியிருப்பு வளாகத்தில் கடந்த 18 ஆம் தேதி துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. இதில் இரண்டு குண்டுகள் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டன. ஒன்று இரண்டாவது தளத்திலும், மற்றொன்று நான்காவது தளத்திலும் கண்டெடுக்கப்பட்டது.

இது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர். ஆரம்பத்தில், அங்கிருந்த சிசிடிவி கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்ததில் எந்தவித தடயமும் கிடைக்காத நிலையில், காவல்துறையினரின் நடவடிக்கையில் எந்தவித முன்னேற்றமும் காண முடியவில்லை. இருப்பினும், தடயவியல் ஆய்வுக்குப் பிறகு, அந்த குண்டுகள் அருகில் உள்ள நடிகர் கமல் ரஷித் கானின் பங்களாவிலிருந்து சுடப்பட்டிருக்கலாம் என்று தெரியவந்தது. இதையடுத்து வெள்ளிக்கிழமை இரவு கான் ஓஷிவாரா காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார். தனது வாக்குமூலத்தில், கான் தனது உரிமம் பெற்ற துப்பாக்கியைப் பயன்படுத்தி குடியிருப்பு வளாகத்தில் இரண்டு முறை சுட்டதை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து பாரதிய நியாய சன்ஹிதா மற்றும் ஆயுதச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின் கீழ் நடிகர் கானுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குடியிருப்பு வளாகம் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பாக, கான் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

# செல்போன் செயலி மூலம் மும்பை தொழிலதிபரிடம் ரூ.11 கோடி மோசடி

**மும்பை, ஜன.25:**



செல்போன் செயலி மூலம் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரிடம் ரூ.11 கோடி மோசடி செய்யப்பட்டுள்ளது.

தெற்கு மும்பை சர்ச்கேட் பகுதியைச் சேர்ந்த 68 வயது தொழிலதிபர் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளார். அப்போது சமூக வலைதளத்தில் விளம்பரம் ஒன்றை அவர் பார்த்துள்ளார். அதனைத் தொடர்ந்து மோகன் சர்மா என்ற பெயரில் வாட்ஸ்அப்பில் பேசிய ஒருவர் பங்குச் சந்தை ஆலோசகராக அறிமுகமாகியுள்ளார்.

"டிரேடர் டைட்டன் விஐபி 46" என்ற வாட்ஸ்அப் குழுவில் இணைக்கப்பட்ட அந்த தொழிலதிபரிடம் பல முதலீட்டாளர்கள் தங்களுக்கு அதிக லாபம் கிடைத்தாக கூறிய ஸ்கிரீன்ஷாட்களை அந்த குழுவில் பகிர்ந்துள்ளனர். இதனை உண்மையென நம்பிய அந்த தொழிலதிபரிடம் பிரீமியம் உறுப்பினராக மாற தனிப்பட்ட டிரேடிங் செயலியை பதிவிறக்கம் செய்யுமாறு கூறினர்.


அதில் கணக்கு தொடங்கியவுடன், தொழிலதிபர் பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பியுள்ளார். அவர் அனுப்பும் பணம் உடனடியாக அந்தச் செயலியின் வேலட்டில் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனால் உண்மையாக வர்த்தகம் நடப்பதாக நம்பியுள்ளார்.

விங்ஸ் ஆப் ப்ரீடம் போன்ற பல்வேறு குழுக்கள் மூலம் அவருக்குப் பயிற்சி மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த டிசம்பர் 29, 2025 முதல் ஜனவரி 19, 2026 வரையிலான குறுகிய காலத்திற்குள் சுமார் ரூ.10.98 கோடியை அவர் முதலீடு செய்தார்.

இந்நிலையில், தனது முதலீட்டை திரும்பப் பெற தொழிலதிபர் முயன்றபோது பணத்தைத் திரும்பப் பெற வேண்டுமானால் ரூ.8 கோடி அபராதம் செலுத்த வேண்டும் என்று மிரட்டியுள்ளனர். அப்போதுதான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார். சைபர் க்ரைமில் தொழிலதிபர் புகார் அளித்ததைத் தொடர்ந்து அடையாளம் தெரியாத நபர்கள் மீது மோசடி, கூட்டுச் சதி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து போலீஸார் தீவிர விசாரணையை தொடங்கியுள்ளனர்.

# உ.பி.யில் மதச்சடங்கு பெயரில் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்

**புதுடெல்லி, ஜன.25:**



உ.பி.யின் அலிகர் நகரைச் சேர்ந்தவர் ஜரீனா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவருக்கு கடந்த 2015-ல் அவரது 15-வது வயதில் அம்ரோஹா நகரை சேர்ந்த ஒருவருடன் நிக்காஹ் எனும் திருமணம் நடைபெற்றது. ஜரீனாவின் கணவர் அவரை 2016 மற்றும் 2021-ல் 2 முறை முத்தலாக் கூறி விவாகரத்து செய்துள்ளார். அப்போது ஜரீனா தனது கணவரையே மீண்டும் மணமுடிக்க நிக்காஹ் ஹலாலா எனும் பெயரில் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உள்ளார்.

உ.பி.யின் சில முஸ்லிம்கள் இடையே 'நிக்காஹ் ஹலாலா' என்ற சர்ச்சைக்குரிய மதச் சடங்கு கடும் எதிர்ப்புகளுக்கு இடையே நிலவுகிறது. இந்த சடங்கு, விவாகரத்தான தம்பதிகள் மீண்டும் திருமணம் செய்துகொள்ள கடைப்பிடிக்கப்படுகிறது. இதில் அப்பெண் வேறு ஒரு ஆணை மணமுடித்து உடனடியாக அவரிடம் இருந்து விவாகரத்து பெற வேண்டும். இதன் பிறகு அப்பெண் தனது முதல் கணவருடன் மீண்டும் இணைந்து வாழலாம்.

எனினும் புதிய ஆடவரால் அப்பெண்ணுக்கு உடனடியாக விவாகரத்து வழங்கப்படாமல் பெரும்பாலும் அப்பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார். மிகவும் தவறான இந்த நிக்காஹ் ஹலாலா மீது உச்ச நீதிமன்றத்தில் கடந்த 2019-ல் மனு அளிக்கப்பட்டு இன்னும் விசாரணக்கு வராமல் உள்ளது.

இந்நிலையில், ஜரீனா கடந்த டிசம்பர் 9, 2025-ல் அம்ரோஹா காவல் நிலையத்தில் அளித்த புகாரில் "ஒவ்வொரு முறையும் நான் யாரிடமோ ஒப்படைக்கப்படுவது போல் உணர்ந்தேன். இதை வெளியில் சொல்ல மிகவும் வெட்கப்பட்டதால், இதை நான் யாரிடமும் சொல்லவில்லை. என் மகளுக்கும் அதைப் பற்றி தெரியவரும் என்பதால் புகார் தர தாமதமானது.

எனது கணவர், மைத்துனர் மற்றும் சில மவுலானாக்கள் என்னை பலமுறை ஹலாலா சடங்கிற்கு உட்படுத்தினர். இதற்காக எனக்கு கொலை மிரட்டலும் விடுத்தனர்" என குற்றம் சாட்டி இருந்தார்.

இது தொடர்பாக அம்ரோஹா போலீஸார், முத்தலாக் தடை மற்றும் போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர். இத்துடன் பிஎன் எஸ் சட்டத்தின் கீழ் பாலியல் வன்கொடுமை, கொலை மிரட்டல் ஆகிய பிரிவுகளின் கீழும் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். ஜரீனாவின் கணவரை போலீஸார் கைது செய்துள்ளனர். மைத்துனர் மற்றும் சில மவுலானாக்களை தேடி வருகின்றனர்.

# திருப்பதியில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3¾ கோடி

**திருமலை, ஜன.25:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து, ஏழுமலையானை தரிசனம் செய்துவிட்டு செல்கின்றனர். அந்த வகையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 64 ஆயிரத்து 571 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 23 ஆயிரத்து 634 பேர் முடி காணிக்கை செலுத்தினர். அன்று ஒரு நாள் உண்டியல் காணிக்கையாக ரூ.3 கோடியே 84 லட்சம் கிடைத்ததாக கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சுற்றுலா கார் மீது பஸ் மோதி கோர விபத்து - 4 பேர் பலி

**பெங்களூரு, ஜன.25:**

கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஒரு குடும்பத்தை சேர்ந்த 13 பேர் அம்மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு நேற்று காரில் சுற்றுலா சென்றுள்ளனர். அதன்படி, முருதேஷ்வரர் கோவில், மரவந்தி கடற்கரை, உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண முட்டு உள்பட பகுதிகளுக்கு சென்றனர். இதனை தொடந்து தர்மஸ்தலாவுக்கு காரில் புறப்பட்டுள்ளனர். இந்நிலையில், உடுப்பி மாவட்டத்தில் கர்கலா பஜகொலி தேசிய நெடுஞ்சாலையில் இன்று மதியம் 3 மணியளவில் சென்றபோது சாலையில் எதிரே வேகமாக வந்த ஆம்னி பஸ் சுற்றுலா கார் மீது மோதியது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 4 பேர் உயிரிழந்தனர். குழந்தை எஞ்சிய 9 பேரும் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பஞ்சாப், அரியானாவில் கனமழை: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**சண்டிகர், ஜன.25:**

பஞ்சாப், அரியானா போன்ற வடமாநிலங்களில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி நிலவி வந்தது. மேலும், கடும் குளிரும் நிலவி வந்தது.

இந்நிலையில், பஞ்சாப், அரியானாவில் நேற்று கனமழை கொட்டித்தீர்த்தது. பல மாதங்களுக்குப்பின் கனமழை பெய்தது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மேலும், கனமழையால் விளைநிலங்களில் தண்ணீர் புகுந்ததால் பயிர்கள் நாசமாகின. சண்டிகரில் கனமழையால் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 3 சிறுவர்கள் காயமடைந்தனர்.

# போதைப்பொருள் கடத்தலில் தொடர்பு; இமாசல பிரதேசத்தில் 12 போலீசார் பணிநீக்கம்

**சிம்லா, ஜன.25:**

இமாசல பிரதேசத்தில் ஹெராயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட போக்குவரத்து காவலர் ஒருவரை அந்த மாநில அரசு இன்று அதிரடியாக பணிநீக்கம் செய்துள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம், அங்கு இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு இதுவரை பணிநீக்கம் செய்யப்பட்ட போலீசாரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. இது குறித்து இமாசல பிரதேச டி.ஜி.பி. அசோக் திவாரி செய்தியாளர்களிடம் கூறுகையில், "போதைப்பொருள் கடத்தல் வழக்குகளில் தொடர்புடைய 12 போலீசார் இதுவரை பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோருக்கும், போதைப் பழக்கத்தை ஊக்குவிப்போருக்கும் இமாசல பிரதேசத்தில் இடமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

# பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவே பிரதமர் மோடி கேரளா வருகிறார் - காங்கிரஸ் தாக்கு

**புதுடெல்லி, ஜன.25:**



பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவே பிரதமர் நரேந்திர மோடி கேரளாவுக்கு வருவது வெட்கக்கேடானது என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் கடுமையாக சாடி உள்ளார்.

முன்னதாக பிரதமர் மோடி நேற்று கேரளாவில் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை தொடங்கி வைத்து பேசினார். அப்போது காங்கிரஸ் கட்சியை, 'முஸ்லிம் லீக் மாவோயிஸ்டு காங்கிரஸ்' என கூறியதுடன், மக்கள் அவர்களிடம் விழிப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டார். இந்த நிலையில் கேரளாவில் பா.ஜனதாவும், பிரதமர் மோடியும் பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பதாக கே.சி.வேணுகோபால் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், 'பிரதமர் மோடியும் பாஜகவும் கேரளாவைப் புரிந்து கொள்ளவில்லை. நாராயண குரு, அய்யன்காளி மற்றும் சட்டம்பி சுவாமிகள் ஆகியோரின் பூமியில், பன்முகத்தன்மையால் பெருமைப்படும் ஒரு மாநிலத்தில் பிரிவினையை ஏற்படுத்தும் முயற்சியில், பிரதமர் தனது வழக்கமான வகுப்புவாத வெறியை தூண்டியிருக்கிறார். பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவே பிரதமர் கேரளா வருகிறார்' என பதிவிட்டு இருந்தார். மேலும் காங்கிரஸ் கட்சியை தோற்கடிக்க ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியுடன் பா.ஜனதா மறைமுக கூட்டணியை ஏற்படுத்தி இருப்பதாக சாடியுள்ள அவர், ஆனால் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி அபார வெற்றி பெறும் என நம்பிக்கையும் தெரிவித்து உள்ளார்.

# எம்பிபிஎஸ் சேர்க்கை விவரங்கள்: ஜன. 31 வரை அவகாசம்

**மும்பை, ஜன.25:**

நிகழ் கல்வியாண்டில் எம்பிபிஎஸ் படிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள் குறித்த விவரங்களை இணைய வழியே வருகிற 31-ஆம் தேதி வரை பதிவேற்றலாம் என்று தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக என்எம்சி சாரபில் வெளியிடப்பட்ட அறிவிப்பு: எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கை தேசிய மருத்துவ ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, நிகழாண்டில் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள், மதிப்பெண் விவரம், இடஒதுக்கீடு விவரம், கட்டண விவரம் உள்ளிட்டவற்றை என்எம்சி இணையப் பக்கத்தில் பதிவேற்ற வேண்டியது அவசியம்.

அதன்படி, இதுவரை மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்வு மற்றும் காலியாக உள்ள மருத்துவ இடங்களுக்கான சிறப்பு கலந்தாய்வு மூலம் சேர்க்கப்பட்ட மாணவா விவரங்களை என்எம்சி தளத்தில் பதிவேற்ற வரும் 15-ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது.

# அயோத்தியை போல் மேற்கு வங்கத்தில் ராமர் கோயில்: 2028-ல் கட்டி முடிக்க திட்டம்

**புதுடெல்லி, ஜன.25:**

திரிணமூல் காங்கிரஸ் கட்சி(டிஎம்சி) தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜி ஆட்சியில் இருப்பது மேற்கு வங்க மாநிலம். இங்கு சில மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இச்சூழலில், இம்மாநிலத்திலும் கோயில், மசூதி அரசியல் நிலவி வருகிறது.

டிஎம்சியில் (திரிணமூல் காங்கிரஸ் கட்சி) இருந்து நீக்கப்பட்ட எம்எல்ஏவான ஹுமாயூன் கபீர் தனது முர்ஷிதாபாத் மாவட்டத்தில் பாபர் மசூதி கட்டி வருகிறார். முதல்வரான மம்தா, தன் மாநிலத்தில் துர்கா மற்றும் மகா காளி கோயில்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். இந்நிலையில், உத்தரப்பிரதேசம் அயோத்தியைப் போல், நதியா மாவட்டத்தின் சாந்திப்பூரில் ஒரு ராமர் கோயில் கட்டப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இக்கோயில் ரூ.100 கோடி செலவில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட உள்ளதாகவும், வரும் 2028ம் ஆண்டிற்குள் கோயில் கட்டி முடிக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. பெங்கால் மொழியில் கிருத்திபாஸ் ஓஜா என்பவர் எழுதிய ராமாயணம் மேற்கு வங்க மாநிலத்தவர் இடையே பிரபலம். இவர், 15ம் நூற்றாண்டில் சமஸ்கிருத ராமாயணத்தை வங்கமொழியில் 'ஸ்ரீ ராம் பஞ்சாலி' என்ற பெயரில் மொழிபெயர்த்த கவிஞர். இவரது ராமாயணம், இன்றும் பெரும்பாலான பெங்காலி இந்துக்கள் வீட்டில் பக்தியுடன் படிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில்தான் புதிய ராமர் கோயில், 'பெங்காலில் ராமர்' எனும் பெயரில் கட்டப்பட உள்ளது. இக்கோயில் ஒரு மதக் கட்டமைப்பாக மட்டுமல்லாமல், வங்காளத்தின் கலாச்சார பாரம்பரியத்தை முன்னிறுத்தும் வகையில் அமைய உள்ளது. பெங்காலில் ராமர் கோயில் கட்டும் பணியை 2017-ல் பதிவு செய்யப்பட்ட மதம் மற்றும் தொண்டு நிறுவனமான ஸ்ரீ கிருத்திபாஸ் ராம் மந்திர் அறக்கட்டளை மேற்கொள்கிறது. இந்த அறக்கட்டளையின் தலைவராக அரிந்தம் பட்டாச்சார்யா உள்ளார். சாந்திப்பூரின் முன்னாள் டிஎம்சி எம்எல்.ஏவான பட்டாச்சார்யா, சமீபத்தில் பாஜகவில் இணைந்துள்ளார்.

# போலி கடவுச்சீட்டு: நபர் கைது

**புதுடெல்லி, ஜன.25:**

சிறையில் உள்ள பிரபல ரௌடி சலீம் பிஸ்டல் உள்பட குற்றச்செயல்களில் ஈடுபடும் பலருக்கு போலி கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்களை ஏற்பாடு செய்து கொடுத்த நபா கைது செய்யப்பட்டதாக தில்லி காவல் துறையினா வெள்ளிக்கிழமை தெரிவித்தனா.

இது தொடர்பாக காவல துறையினா மேலும் கூறியதாவது: புது தில்லி நீதிமன்றத்தால் இந்த மாத தொடக்கத்தில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஹாதேஷ் என்ற சோனுவை காவல் துறையினா கைது செய்துள்ளனா. ஆயுதச் சட்டம், பிஎன்எஸ் மற்றும் கடவுச்சீட்டுச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறப்புப் பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்கில் அவா தேடப்பட்டு வந்தாா. நந்து கும்பல் மற்றும் சலீம் பிஸ்டல் கும்பல் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் உறுப்பினாகள் சட்ட அமலாக்கத் துறையினரிடமிருந்து தப்பித்து, சட்டவிரோதமாகப் பல்வேறு நாடுகளுக்குச் செல்ல உதவுவதற்காக ஹாதேஷ் போலி ஆவணங்களைத் தயாரித்ததாக புலனாய்வாளாகள் தெரிவித்தனா.

முன்னதாகக் கைது செய்யப்பட்ட ஒருவா, ஹாதேஷ் தனக்கும், தாதா சலீம் பிஸ்டல் உள்பட மற்ற கூட்டாளிகளுக்கும் போலிக் கடவுச்சீட்டுகளை ஏற்பாடு செய்ததாகவும், மேலும் கும்பலுக்கு நிதியுதவி செய்ததாகவும் தெரிவித்தாா.

ஜாக்ரிதி என்கிளேவைச் சோந்த ஹாதேஷ், காஜியாபாத்தில் உள்ள சித்தாாத் விஹாரில் தங்கியிருந்தாா. அவரது கைது, போலிக் கடவுச்சீட்டு மோசடிகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலைப்பின்னல்கள் மற்றும் அவற்றின் மாநிலங்களுக்கு இடையேயான தொடாபுகள் குறித்த மேலதிகத் தகவல்களை வழங்கும் என்று எதிாபாாக்கப்படுகிறது.

# திருமலை கலப்பட நெய் விவகாரம்: 24 பேர் மீது குற்றப்பத்திரிகை



**திருமலை, ஜன.25:**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 2019-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை, ஜெகன்மோகன் ரெட்டியின் ஆட்சியில் கலப்பட நெய்யால் பிரசாதங்கள் தயாரிக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டதாக புகார் எழுந்தது. சந்திரபாபு நாயுடு அரசு ஆட்சிக்கு வந்ததும் சிபிஐ விசாரணை தொடங்கியது. சிபிஐ இணை இயக்குனர் விரேஷ் பிரபு, டிஐஜி முரளி ராம்பா உட்பட 30 பேர் கொண்ட குழு 15 மாதங்களாக இந்த வழக்கை விசாரித்தது. ஆந்திரா உட்பட 12 மாநிலங்களில் புலனாய்வு குழு அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

முதலில் தமிழகத்தில் இருந்துதான் கலப்பட நெய் கொள்முதல் செய்யப்பட்டிருக்கலாம் என நினைத்து விசாரணையை தொடங்கினர். ஆனால், இதற்கு முக்கிய காரணம் போலேபாபா ஆர்கானிக் பால்பொருள் தயாரிப்பு நிறுவனம் என்பதும், இதற்கு பலர் உடந்தையாக இருந்துள்ளனர் என்பதும் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ஆதலால், போலே பாபா பால் பொருள் தயாரிப்பு நிறுவனத்தை சேர்ந்த இயக்குனர்கள் போமில் ஜெயின், விபின் ஜெயின் ஆகியோரை சிபிஐ புலனாய்வு குழு கைது செய்துள்ளது.

மேலும், ஆந்திரா உட்பட 12 மாநிலங்களை சேர்ந்த பலர் இதற்கு உடந்தையாக இருந்துள்ளனர் என்றும் சிபிஐ புலனாய்வு குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. முதல் குற்றப்பத்திரிகையில் 24 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.




## காதல் திருமணம் செய்த 12-வது நாளில் இளம்பெண் தற்கொலை - போலீசார் விசாரணை

**திருப்பூர், ஜன.25:** திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள பூமலூர் பகுதியை சேர்ந்தவர் பரமசிவம். இவருடைய மனைவி சித்ரா. இவர்களுடைய மகள் ஜீவிதா (25 வயது). இவர், எம்.பி.பி.எஸ். படித்துள்ளார். ஜீவிதாவுக்கும், கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அருகே தென்னமநல்லூர் கள்ளிமேட்டை சேர்ந்த தனியார் நிறுவன ஊழியரான அபிஷேக் (28 வயது) என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. பின்னர் அது காதலாக மாறியது.

இருவரும் தீவிரமாக காதலித்து வந்த நிலையில், கடந்த 11-ந்தேதி வீட்டுக்கு தெரியாமல் திருமணம் செய்து கொண்டனர். பின்னர் தான் திருமணம் செய்து கொண்டதாக ஜீவிதா தனது பெற்றோருக்கு தகவல் தெரிவித்துள்ளார். காதல் தம்பதி மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கையை தொடங்கினர்.

ஜீவிதா மருத்துவருக்கு படித்து இருந்தாலும், அவருக்கு தகுந்த வேலை கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இது பற்றி அவர் தனது பெற்றோர் மற்றும் தோழிகளிடம் கூறி புலம்பி உள்ளார். அதற்கு அவர்கள் ஆறுதல் கூறி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் ஜீவிதா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தகவல் அறிந்த தொண்டாமுத்தூர் போலீசார் விரைந்து சென்று, ஜீவிதாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து இது குறித்து வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இது தொடர்பாக கோவை வடக்கு ஆர்.டி.ஓ.வும் விசாரணை நடத்தி வருகிறார். காதல் திருமணம் செய்த 12-வது நாளில் பெண் மருத்துவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கோவை வாகன உதிரிபாக விற்பனைக் கடையில் பயங்கர தீ விபத்து



**கோவை, ஜன.25:** கோவையில் வாகன உதிரிபாக விற்பனைக் கடையில் தீ பயங்கர விபத்து ஏற்பட்டது. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு துறையினர் ஈடுபட்டனர்.

கோவை காட்டூர் அருகே, பட்டேல் சாலையில், பிள்ளையார் கோயில் தெரு உள்ளது. இந்தப் பகுதியில், தனியாருக்கு சொந்தமான மாதேஸ்வரி இயந்திர உதிரிபாகங்கள் விற்பனைக் கடை உள்ளன. தரைத்தளம் மற்றும் முதல் தளம், 2-ம் தளம் கொண்ட கட்டிடமாக இது உள்ளது.

இந்த கட்டிடத்தின் தரைத்தளத்தில் கடை உள்ளது. மற்ற இரு தளங்களும் கடையின் பொருட்கள் வைக்க உள்ளிட்டவற்றுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில், இன்று (ஜன.23) மதியம் வழக்கம் போல், கடையில் ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். மேலும், இக்கட்டிடத்தின் ஒரு தளத்தில் வெல்டிங் வைக்கும் பணிகளும் நடைபெற்று வந்ததாக தெரிகிறது.

இந்நிலையில், இன்று மாலை இக்கட்டிடத்தின் மேல் தளத்தில் இருந்து திடீரென கரும்புகை வெளியே வந்தது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ஊழியர்கள், விசாரித்த போது, கடையில் தீப்பிடித்தது தெரியவந்தது. தொடர்ந்து இதுகுறித்து கோவை தெற்கு தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு வந்து கட்டிடத்தில் பிடித்த தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மாநகர காவல் ஆணையர் என்.கண்ணன், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், காவல் துணை ஆணையர் என்.தேவநாதன் உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்கு வந்து தீயணைப்புப் பணியை போலீஸாருடன் இணைந்து தீவிரப்படுத்தினர். அக்கட்டிடம் அருகே இருந்த மக்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

மேலும், மாவட்டத்தில் உள்ள பல்வேறு நிலையங்களில் இருந்து தீயணைப்பு ஊர்திகள் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டு தீயணைப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. உள்ளே இயந்திர உதிரி பாகங்கள் உள்ளிட்டவை இருப்பதால் தீ கொளுந்து விட்டு எரிந்தது.

இதனால் அப்பகுதியில் கடுமையாக கரும்புகை சூழ்ந்தது. தீயை முழுமையாக கட்டுப்படுத்த மேலும் சில மணி நேரங்கள் ஆகும் எனத் தெரிகிறது.

## ஒரு வாரத்தில் திருமணம்.. அழைப்பிதழ் கொடுக்க சென்ற புது மாப்பிள்ளைக்கு நேர்ந்த சோகம்



**மதுரை, ஜன.25:** மதுரை மாவட்டம் உசிலம்பட்டி திருவள்ளுவர் நகரை சேர்ந்தவர் கருப்பையா. இவருடைய மகன் பிரசன்ன வெங்கடேஷ் (வயது 26). இவர் பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். இவருக்கு வருகிற 28-ந்தேதி திருமணம் நடக்க இருந்தது. திருமண அழைப்பிதழை உறவினர்களுக்கு வழங்கி வந்தார்.

நேற்று முன்தினம் இரவு உசிலம்பட்டி பகுதியில் திருமண அழைப்பிதழ் கொடுத்துவிட்டு, வீடு திரும்பியபோது உசிலம்பட்டியில் பேரையூர் ரோட்டில் சென்றபோது எதிரே வந்த வேன் ஒன்று, எதிர்பாராதவிதமாக அவரது பைக் மீது மோதியது. இதில் பிரசன்ன வெங்கடேஷ் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இதுகுறித்து உசிலம்பட்டி நகர் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். அவரது உடலை பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து தொடர்பாக வேன் டிரைவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். சில தினங்களில் திருமணம் நடைபெற இருந்த நிலையில் நடந்த இந்த துயர சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க சிறப்பு முகாம்



**சென்னை, ஜன.25:** மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்துக்கான ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் காலம், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்துவதற்கான அவகாசம் ஜன.30-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதனால் வார விடுமுறை நாட்களான இன்றும், நாளையும் சென்னையில் உள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். இதில் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் மற்றும் 18 வயது நிரம்பிய தகுதியுடைய நபர்கள் படிவம்6 ஐ, உறுதிமொழி படிவத்துடன் சமர்ப்பித்து தங்கள் பெயரை சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு வாக்காளரும், முன்மொழியப்பட்ட சேர்க்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்க அல்லது ஏற்கெனவே உள்ள பெயரை நீக்க கோர படிவம்7 மூலம் விண்ணப்பிக்கலாம்.

முகவரி மாற்றுதல், ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்ய, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மாற்றம் செய்ய, மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் என குறிப்பது ஆகிய கோரிக்கை உடையவர்கள் படிவம்8 மூலம் விண்ணப்பிக்கலாம். இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.17-ம் தேதி வெளியிடப்பட உள்ளது.

## பிரதமர் மோடி வருகையை எதிர்த்து கருப்பு கொடி போராட்டம் நடத்திய காங்கிரஸ் கட்சியினர் கைது



**சென்னை, ஜன.25:** கிராமப்புறங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் பெயரை மாற்றியது மற்றும் அதில் இருந்த மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியதை கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்து வருகிறது.

இந்நிலையில், நேற்று தமிழகம் வந்த பிரதமர் மோடிக்கு எதிராக கருப்பு கொடி காட்டி போராட்டம் நடத்த இருப்பதாக காங்கிரஸ் அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு, முன்னாள் எம்பி பெ.விஸ்வநாதன் தலைமையில் காங்கிரஸார் மதுராந்தகத்தில் கூடி தீப்பந்தம் ஏற்றி எதிர்ப்பு தெரிவித்தனர்.

அவர்களை போலீஸார் கைது செய்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்சி அணி தலைவர் ரஞ்சன்குமாரை போலீஸார் நேற்று முன்தினம் வீட்டு காவலில் வைத்தனர். இந்நிலையில், அவர் தனது வீட்டு மாடியில் மோடியே, திரும்பி செல் என்ற வாசகம் இடம்பெற்ற பலூனை பறக்கவிட்டார்.

இதன் தொடர்ச்சியாக, மாவட்ட தலைவர் ஜெ.டில்லி பாபு தலைமையில் பெரியமேடு பகுதியில் கருப்பு உடை அணிந்து, கருப்பு கொடி ஏந்தி, கருப்பு பலூன்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸாரை போலீஸார் கைது செய்தனர்.

மேலும், பர்கிட் சாலை பெரியார் சிலை அருகிலும் கருப்பு கொடி காட்டிய காங்கிரஸார், டில்லி பாபுவின் வட சென்னையில் உள்ள அலுவலகம் முன்பு கருப்பு கொடியுடன் கூடிய காங்கிரஸாரை போலீஸார் கைது செய்து, பின்னர் மாலையில் விடுவித்தனர்.

## துபாய்-சென்னை விமான சேவை நிறுத்தம்: ஏர் இந்தியா அறிவிப்பு - பயணிகள் அதிர்ச்சி




**சென்னை, ஜன.25:** துபாயில் இருந்து சென்னைக்குஇண்டிகோ, எமிரேட்ஸ் உள்ளிட்ட விமானங்கள் நேரடி விமான சேவையை வழங்கி வருகின்றன. இந்த விமான சேவைகள் தொடங்குவதற்கு முன்னதாக சென்னையில் இருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் துபாய்க்கு நேரடி விமான இயக்கப்பட்டது. இந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதாக கூறப்பட்டதையடுத்து கடந்த 2007-ம் ஆண்டு ஏர் இந்தியா நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது.

அரசு நிறுவனமாக இந்த நிறுவனம் இருந்து வந்ததால் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு ஏற்ற வகையில் இருந்தது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக துபாய்-சென்னை இடையே விமான சேவை இயக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் தற்போது திடீரென துபாய்-சென்னை இடையிலான விமான சேவை நிறுத்தப்படுவதாக ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது. இது பயணிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. துபாயில் இருந்து சென்னைக்கு தினமும் அதிகமான பயணிகள் பயணம் செய்து வருகின்றனர்.

இந்த விமான சேவை மிகவும் நல்ல வருவாயை ஈட்டி வந்தது. எனினும் விமான சேவையை நிறுத்திவிட்டு பெங்களூரில் இருந்து துபாய்-க்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான சேவையை தொடங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழகத்தை ஏர் இந்தியா நிறுவனம் முழுவதுமாக புறக்கணிக்கிறது என்று விமான போக்குவரத்து நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதனிடையே மத்திய-மாநில அரசுகள் ஏர் இந்தியா விமான நிறுவனத்திடம் பேசி துபாய்-சென்னை நேரடி விமான சேவையை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 5 வயது குழந்தையின் நுரையீரல் பாதைக்குள் சிக்கிய விசிலை வெளியே எடுத்த மருத்துவர்கள்



**சென்னை, ஜன.25:** விளையாடும்போது தவறுதலாக 5 வயது குழந்தையின் நுரையீரல் பாதைக்குள் சிக்கிய விசிலை எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனை மருத்துவர்கள் வெளியே எடுத்தனர்.

எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் எஸ்.மதிவாணன் கூறியதாவது: திருவண்ணாமலையை சேர்ந்த 5 வயது பெண் குழந்தை ஒன்று, விசில் ஊதி விளையாடிக் கொண்டிருந்தபோது, தவறுதலாக அதை விழுங்கி விட்டது.

அது சுவாசப் பாதைக்குள் சென்று சிக்கிக் கொண்டது. இதையடுத்து, குழந்தையை அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு எக்ஸ்ரே, ஸ்கேன் பரிசோதனைகள் செய்யப்பட்டதில், எந்த பொருளும் தென்படவில்லை.

இதனால், குழந்தையை வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டனர். ஆனால், குழந்தை சுவாசிக்கும்போது எல்லாம் விசில் சத்தம் வந்து கொண்டே இருந்தது. இதையடுத்து உயர் சிகிச்சைக்காக குழந்தையை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனைக்கு பெற்றோர் அழைத்து வந்தனர்.

இங்கு பரிசோதனை செய்து பார்த்ததில் குழந்தையின் நுரையீரலுக்குள் உள்ள வலது சுவாச குழாயில் நான்காம் நிலை பகுதியில் விசில் சிக்கியிருந்தது தெரியவந்தது. வழக்கமாக, குழந்தைகள் எதையாவது விழுங்கி விட்டால், உணவு குழாய் வழியே ஜீரண மண்டலத்துக்குள் சென்றுவிடும்.

அரிதாக இந்த குழந்தையின் வலது பக்க நுரையீரல் சுவாச பாதையின் விசில் சிக்கிக் கொண்டுள்ளது.

இதையடுத்த, மருத்துவமனையின் நுரையீரல் பிரிவு பேராசிரியர் பாலமுருகன் தலைமையில் மருத்துவர்கள் ஷாஜாத்தி பேகம், அசோக் குமார், சக்திவேல் ஆகியோர் அடங்கிய பல்நோக்கு மருத்துவக் குழுவினர் குழந்தைக்கு சிகிச்சை அளிக்க முன்வந்தனர்.

அதன் படி, ஃபைபர் ஆப்டிக் ப்ராங்கோஸ்கோபி எனப்படும் ஊடுகுழாய் கருவியை குழந்தையின் சுவாச பாதையில் செலுத்தி 3 மணி நேரத்துக்கு பிறகு விசிலை வெளியே எடுத்தனர். இந்த சிகிச்சையின் போது குழந்தைக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது.

தனியார் மருத்துவமனைகளில் இதற்கு ரூ.3 லட்சம் வரை செலவாகும். இந்த சிகிச்சை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் இலவசமாக செய்யப்பட்டது.

குழந்தைகளுக்கு விசில், சிறு பொருட்கள், பட்டன், பேட்டரி போன்றவற்றை விளையாட வழங்கக்கூடாது. தவறுதலாக விழுங்கும்போது, அது எளிதில் சுவாச பாதைக்குள் சிக்கிக் கொள்ளும்.பெற்றோர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## எழும்பூர்-புதுச்சேரி எக்ஸ்பிரஸ் ரெயிலுக்கு கூடுதல் நிறுத்தம்




**எழும்பூர், ஜன.25:** புதுச்சேரியில் இருந்து முண்டியம்பாக்கம் வழியாக திருப்பதி வரை தினசரி எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்-16112) இயக்கப்படுகிறது. இதேபோல் எழும்பூரில் இருந்து ஒலக்கூர் வழியாக புதுச்சேரி நோக்கி மற்றொரு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்-16115) இயக்கப்பட்டு வருகிறது. ஆனால் புதுச்சேரி-திருப்பதி எக்ஸ்பிரஸ் ரெயில் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரி அமைந்துள்ள முண்டியம்பாக்கத்தில் இதுவரை நிற்காமல் சென்று வந்தது.

எழும்பூர்-புதுச்சேரி எக்ஸ்பிரஸ் ரெயில் ஒலக்கூரில் நிற்காமல் சென்று வந்தது. இதனால் முண்டியம்பாக்கம், ஒலக்கூர் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர். எனவே இந்த இரு ரெயில் நிலையங்களிலும் மேற்கண்ட எக்ஸ்பிரஸ் ரெயில்கள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் பயணிகளின் கோரிக்கையை ஏற்று புதுச்சேரி-திருப்பதி எக்ஸ்பிரஸ் ரெயில் முண்டியம்பாக்கத்திலும், எழும்பூர்-புதுச்சேரி எக்ஸ்பிரஸ் ரெயில் ஒலக்கூரிலும் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) முதல் நின்று செல்லும் என்று தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. அதன்படி புதுச்சேரி-திருப்பதி எக்ஸ்பிரஸ் நாளை மறுநாள் முதல் முண்டியம்பாக்கம் ரெயில் நிலையத்திற்கு மதியம் 3.44 மணிக்கு வந்து சேரும். பின்னர் மீண்டும் 3.45 மணிக்கு புறப்பட்டுச்செல்லும்.

இதேபோல் சென்னை எழும்பூர்-புதுச்சேரி எக்ஸ்பிரஸ் ஒலக்கூர் ரெயில் நிலையத்திற்கு இரவு 8.04 மணிக்கு வந்து சேரும். பின்னர், 8.05 மணிக்கு புறப்பட்டுச்செல்லும். இந்த அறிவிப்பால் முண்டியம்பாக்கம், ஒலக்கூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## அமைச்சர் நேரு வழக்கு: ஆதாரங்களை ஒப்படைக்க டிஜிபிக்கு ஐகோர்ட்டு உத்தரவு



**சென்னை, ஜன.25:** நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் பணியாளர்களை நியமிப்பதில பல நூறு கோடி லஞ்சம் கைமாறியுள்ளதாக வந்த புகாரை ஆதாராங்களுடன் மத்திய அமலாக்கத் துறை தமிழக டி.ஜி.பிக்கு அனுப்பி, வழக்கு பதிவு செய்ய கோரியும் இதுவரை தமிழக போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளதால், உடனடியாக வழக்கு பதிய உத்தரவிடக் கோரி அ.தி.மு.க. எம்பி ஐ.எஸ்.இன்பதுரை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், அமலாக்கத்துறை அனுப்பிய கடிதத்தின் மீது முதல் கட்ட விசாரணை நடந்துக் கொண்டிருக்கிறது என்றார். இதற்கு தலைமை நீதிபதி ஏன் இன்னும் வழக்கு பதிவு செய்யவில்லை என்று கேள்வி எழுப்பினார். அதற்கு அரசு தரப்பில் மனுதாரர் இன்பதுரை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மனுதாக்கல் செய்துள்ளார் என்று தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், அரசியல் காழ்ப்புணர்ச்சி பற்றியெல்லாம் நாங்கள் பார்ப்பதில்லை, வழக்கின் தன்மையை பார்க்கிறோம்.. தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யும்படி எங்களால் இப்போதே உத்தரவிட முடியும். ஆனால் போதிய அவகாசம் வழங்க வேண்டும் என்பதால் வரும் 28-ந் தேதிக்குள் எழுத்து பூர்வமாக பதில் மனு தாக்கல் செய்ய அரசுக்கு அவகாசம் அளிப்பதாக கூறினர்.

மேலும் அமலாக்கத் துறை டி.ஜிபி.க்கு அனுப்பிய ஆதாரங்களை 28ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள் விசாரணையை வரும் 28-நதேதிக்கு ஒத்திவைத்தனர்.

## நெல்லையில் 1.1 கிலோ கஞ்சா, பைக் பறிமுதல்: 2 பேர் கைது



**திருநெல்வேலி, ஜன.25:** திருநெல்வேலி மாநகரம் மேலப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வீரமாணிக்கபுரம் பேருந்து நிலையம் அருகில் நேற்று போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கோமதிசங்கர் மற்றும் காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகப்படும்படி இருசக்கர வாகனத்தில் வந்த வீரமாணிக்கபுரம், குறிச்சி பகுதியை சேர்ந்த சங்கரபாண்டி மகன் கணேஷ்குமார் (வயது 20) மற்றும் அதே பகுதியை சேர்ந்த சரித்திர பதிவேடு குற்றவாளியான பாபநாசம் மகன் ரமேஷ்(44) ஆகியோரை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர்.

அதில் அவர்கள் விற்பனைக்கு அரசால் தடை செய்யப்பட்ட உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சுமார் 1கிலோ 100 கிராம் கஞ்சா மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து அந்த கஞ்சா மற்றும் அதனை கொண்டு செல்ல பயன்படுத்திய இரு சக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்த போலீசார், அவர்கள் 2 பேரையும் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# மேட்டுப்பாளையம்-குன்னூர் இடையே நீராவி என்ஜின் சோதனை ஓட்டம்



**ஊட்டி, ஜன.25:** நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் பலரும் மலை ரெயிலில் பயணம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். பச்சை பசேல் என காணப்படும் தேயிலை தோட்டங்களுக்கு மத்தியில் குகைகள் வழியாக சென்று மலையின் இயற்கை அழகை ரசிப்பதற்காக மலை ரெயிலில் செல்கின்றனர். ஆசியாவில் தற்போதும் பல் சக்கரங்களில் இயங்கும் ஒரே மலை ரெயிலான இந்த மலை ரெயில் முதல் முறையாக குன்னூர்-மேட்டுப்பாளையம் இடையே கடந்த 1899-ம் ஆண்டு முதல் இயக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் நிலக்கரி மூலமாக இயக்கப்பட்டு வந்தது. அப்போது சுற்றுச்சூழல் மாசுபாடு, பேசுபொருளாக இருந்தது. இதனால் 2002-ம் ஆண்டு பர்னஸ் ஆயில் மூலமாக இயக்கக்கூடிய வகையில் என்ஜின் மாற்றி வடிவமைக்கப்பட்டது.

இந்தநிலையில் எக்ஸ் கிளாஸ் நீராவி என்ஜின்கள் 3 முதல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருச்சி பொன்மலை பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருச்சி பொன்மலை பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நீலகிரி குயின் என அழைக்கப்படும் எக்ஸ் கிளாஸ் மலை ரெயில் நீராவி என்ஜினை பொலிவுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த என்ஜின் சமீபத்தில் ராட்சத லாரி மூலம் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் கொண்டு வரப்பட்டு, கிரேன்கள் மூலம் ரெயில் பாதையில் இறக்கி வைக்கப்பட்டது. இந்தநிலையில் நேற்று மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூருக்கு சோதனை ஓட்டமாக புதுப்பொலிவுடன் நீராவி என்ஜின் இயக்கப்பட்டது. மேட்டுப்பாளையத்தில் காலை 9.30 மணிக்கு புறப்பட்டு மதியம் 1.30 மணியளவில் குன்னூர் வந்து சேர்ந்தது. விரைவில் இந்த என்ஜினை இயக்க ரெயில்வே துறையினர் முடிவு செய்துள்ளனர்.

# மாமல்லபுரத்தில் 'ரோப்கார்' சேவை: மெட்ரோ ரயில் நிறுவனம் ஆலோசனை



**சென்னை, ஜன.25:** தமிழகத்தில் முக்கிய சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், கொடைக்கானலில் ரோப் கார் சேவையைத் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய தனியார் நிறுவனத்துடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் விரைவில் ஒப்பந்தம் செய்யவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனா.

மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்த முடியாத தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலங்களான உதகை, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் ரோப் கார் சேவையைத் தொடங்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதன் தொடக்கமாக நீலகிரி மாவட்டம், உதகையில் ரோப் கார் சேவையை செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை பெறுவதற்கு தனியார் நிறுவனத்துடன் மெட்ரோ ரயில் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. அந்த நிறுவனத்தின் அறிக்கை 3 மாதங்களில் கிடைக்கும். அதன்பிறகு ரோப் கார் திட்டத்துக்கான, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

இதேபோல, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் ரோப் கார் சேவையைக் கொண்டுவர மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய தனியார் நிறுவனத்துடன் விரைவில் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக திட்ட அதிகாரி அர்ச்சுனன் தெரிவித்தா.

# வழிபாட்டு தல கட்டிடங்களுக்கு கலெக்டரின் அனுமதி தேவையில்லை என்ற அரசாணைக்கு தடை - மதுரை ஐகோர்ட்டு உத்தரவு

**மதுரை, ஜன.25:** மதுரையை சேர்ந்த கலாநிதி என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறி இருந்ததாவது:-

தமிழ்நாட்டில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாக்க, பிற மத சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் புதிய மத நிறுவனங்கள் நிறுவப்படக்கூடாது என்று நீதிபதி வேணுகோபால் ஆணையம் பரிந்துரைத்தது.

அதன் பேரில் மாவட்ட, நகராட்சி கட்டிட விதிகள் சட்டங்களின்படி, பொது வழிபாடு அல்லது மத நோக்கங்களுக்காக கட்டிடங்களை கட்டுவதற்கு மாவட்ட கலெக்டரின் முன் ஒப்புதல் கட்டாயமாக தேவைப்பட்டது.

அத்தகைய கட்டுமானம் பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் இருந்தால் அனுமதி மறுக்க கலெக்டருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையை ஐகோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் அங்கீகரித்து உள்ளன.

இந்த நிலையில் சமீபத்தில் மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு மாவட்ட கலெக்டரின் தடையில்லா சான்று பெறுவது கட்டாயம் இன்றி, திட்ட அனுமதி வழங்கப்படும் என்று தமிழ்நாடு வீட்டு வசதித்துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணை ஏற்கனவே உள்ள விதிகளுக்கு எதிரானது.

எனவே வழிபாட்டு தல கட்டிடங்களுக்கு அந்தந்த மாவட்ட கலெக்டரின் தடையில்லா சான்று தேவையில்லை என விலக்கு அளித்து தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், செந்தில்குமார் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மேற்கண்ட அரசாணைக்கு தடை விதித்தும், இந்த வழக்கு குறித்து தமிழ்நாடு வீட்டு வசதித்துறை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பதில் அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தனர்.

# பொது இடங்களில் அனுமதியின்றி மரங்கள் வெட்டிய 6 நபர்களுக்கு ரூ.1.75 லட்சம் அபராதம்



**சென்னை, ஜன.25:** பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பசுமைப் பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வகை மரக்கன்றுகள் நடப்பட்டும், குறுங்காடுகள் உருவாக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சி பொது இடங்களில் உள்ள மரங்களைப் பாதுகாத்திடும் வகையில் பொது இடங்களில் உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அனுமதியின்றி வெட்டுபவர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர் நடவடிக்கையாக, 22.01.2026 அன்று ஒருநாள் மட்டும் பொது இடங்களில் அனுமதியின்றி மரங்களை வெட்டிய நபருக்கு ரூ.1 லட்சம் அபராதமும், மரக்கிளைகளை வெட்டிய 5 நபர்களுக்கு தலா ரூ.15 ஆயிரம் வீதம் ரூ.75 ஆயிரம் அபராதம் என மொத்தம் ரூ.1.75 லட்சம் அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் மரங்களின் கிளைகளை அகற்றுதல், காய்ந்து போன மரங்களை அகற்றுதல், மாற்று இடங்களில் மரங்களை நடுதல் மற்றும் மரங்களை அகற்றுதல் உள்ளிட்ட சேவைகளை பொதுமக்கள் எளிமையாக பயன்படுத்துவதற்கும் காலதாமதத்தை குறைத்து துரித நடவடிக்கை மேற்கொள்ளும் வகையிலும், மரங்கள் அகற்றுதல் மற்றும் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட சேவைகள் வனத்துறை மூலமாக நேரடியாக விண்ணப்பித்த நிலையை மாற்றி, 12.01.2026 முதல் அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் HTTPS://CHENNAICORPORATION.GOV.IN/GCC/ என்ற இணையதளத்தில் பசுமைக் குழு போர்ட்டல் (GREEN COMMITTE APPLICATION) மற்றும் நம்ம சென்னை செயலி மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பெறப்பட்ட விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சமூக ஆர்வலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் மூலமாக களஆய்வு மேற்கொள்ளப்பட்டு, களஆய்வின் ஆய்வறிக்கை பசுமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அதன் விவரம் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தியாக வாயிலாக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், மாநகராட்சியின் இணையதளத்தின் வாயிலாகவும் விண்ணப்பதாரர்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உரிய அனுமதியின்றி பொது இடங்களில் மரங்களை வெட்டுபவர்களுக்கு ரூபாய் 1 லட்சம் அபராதமும், மரக்கிளைகளை வெட்டுதல், மரத்தில் ஆணி அடித்து விளம்பரப் பலகைகள் பொருத்துதல், மரங்களைச் சுற்றி விளக்குகள் பொருத்துதல் உள்ளிட்டவற்றிற்கு ரூபாய் 15 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது இடங்களில் உள்ள மரங்கள், மரக்கிளைகளை வெட்டுதல் தொடர்பாக மாநகராட்சியின் கட்டுப்பாட்டு அறை எண் 1913 தொலைபேசி வாயிலாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மரங்கள் அகற்றுதல் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மற்றும் நம்ம செயலில் மூலமாக பொதுமக்கள் விண்ணப்பித்திடவும், பொது இடங்களில் அனுமதியின்றி மரங்கள் மற்றும் மரக்கிளைகளை வெட்டுவதைத் தவிர்த்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# 16 வயது சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை: முதியவருக்கு சாகும் வரை சிறை தண்டனை

**தூத்துக்குடி, ஜன.25:** தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2020-ம் ஆண்டு 16 வயது சிறுமியை தூத்துக்குடியைச் சேர்ந்த தங்கபாண்டி (வயது 70) என்பவர் பாலியல் வன்கொடுமை செய்தார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர்கள், தங்கபாண்டியிடம் கேட்டபோது தங்கபாண்டியின் மகளான தூத்துக்குடியைச் சேர்ந்த வேதசெல்வி(42) மற்றும் மகனான ராஜா(34) ஆகிய 2 பேரும் சேர்ந்து மேற்சொன்ன பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து பாதிக்கபட்ட சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ மற்றும் கொலை மிரட்டல் வழக்குப்பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கை காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம்-II-ல் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா இன்று தங்கபாண்டி குற்றவாளி என உறுதி செய்து, அவருக்கு இயற்கையாக மரணம் ஏற்படும் வரை ஆயுள்தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதமும் குற்றவாளிகள் வேதசெல்வி மற்றும் ராஜா ஆகிய 2 பேருக்கும் தலா ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த திருச்செந்தூர் உட்கோட்ட டி.எஸ்.பி. மகேஷ்குமார், திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ரசீதா, திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் துறையினர், இந்த வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் இந்திரா, நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் சேவியர் ஞானப்பிரகாசம் ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# சாலை விபத்துகளில் தினமும் 48 பேர் இறப்பு!

**சென்னை, ஜன.25:** தமிழகத்தில் நாள்தோறும் சாலை விபத்துகளில் 48 பேர உயிரிழப்பதாக தாம்பரம் போக்குவரத்து துணை ஆணையா சமய சிங் மீனா தெரிவித்தார்.

அவசர மருத்துவ உதவிக்காக அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு 30 நிமிஷங்களில் பாதிப்பை துல்லியமாகக் கண்டறிந்து சிகிச்சையளிக்கும் அதி நவீன அவசர சிகிச்சை மையத்தை சென்னை, கிளெனீக்கள்ஸ் மருத்துவமனை தொடங்கியுள்ளது.

உயா் நுட்பத்திலான மருத்துவக் கருவிகள், நிபுணத்துவம் பெற்ற மருத்துவா்கள், மேம்பட்ட மருத்துவக் கட்டமைப்பு கொண்ட அந்த மையத்தின் செயல்பாட்டை சமய சிங் மீனா அண்மையில் தொடங்கி வைத்தார்.



அப்போது அவா் பேசியதாவது: தவிா்க்க முடியாத மருத்துவ செலவுகளையும், துயரங்களையும் அளிப்பது சாலை விபத்துதான். கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சாலை விபத்துகள் தொடா்பான அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டது. அதில், தமிழகத்தில் மட்டும் நாள்தோறும் சராசரியாக 191 விபத்துகளும், 48 உயிரிழப்புகளும் நேரிடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 11.6 சதவீதம் குறைவான விகிதம் இது என்றாலும், விபத்துகளை முழுமையாகத் தடுக்க வேண்டும் என்பதே தற்போதைய இலக்காக உள்ளது.

கடந்த ஆண்டு சென்னையில் மட்டும் 2,016 விபத்துகள் நகழ்ந்தன. அடுத்தபடியாக தாம்பரத்தில் 995 விபத்துகள் பதிவாகியுள்ளன. விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் ஒருபுறமும், உயிா்காக்கும் அவசர சிகிச்சை வசதிகளும் மிகவும் அவசியம் என்றாா.

நிகழ்ச்சியில், மருத்துவமனையில் தலைமை செயல் அதிகாரி எஸ்.நிரஞ்சனி, சென்னை - ஹைதராபாத் தலைமை செயல் அதிகாரி பரத் காந்த் ரெட்டி, அவசர சிகிச்சை பிரிவுத் தலைவா் டாக்டா் ஸ்ரீராம் உள்ளிட்டோா் கலந்து கொண்டனா.

# நெல்லையில் சட்ட விரோதமாக மதுபானம் விற்றவர் கைது

**திருநெல்வேலி, ஜன.25:** திருநெல்வேலி மாநகரம் பெருமாள்புரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள பகுதியில் நேற்று மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரா மற்றும் காவல்துறையினர் ரோந்து பணிக்கு சென்றனர்.

அப்போது அங்கே சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட கங்கைகொண்டானை சேர்ந்த கருப்பையா மகன் ரஞ்சித்குமார் (வயது 46) என்பவரை கைது செய்த போலீசார், அவரிடமிருந்து 28 மது பாட்டில்களை பறிமுதல் செய்து விசாரணை செய்து வருகின்றனர்.




## பா.ஜ.க.வை எதிர்க்க விஜய் அச்சப்படுகிறார் - திருமாவளவன்



**சென்னை, ஜன.25:** விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனிடம் 'ஜனநாயகன்' திரைப்படத்தை முடக்குவதில் மத்திய அரசு வேகமாக செயல்படுவதை எப்படி பார்க்கிறீர்கள் என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் கூறியதாவது:

* 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு அரசியல் தலையீடு இருக்கிறது என்ற விவாதங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.
* அப்படி பா.ஜ.க. தலையீடு இருக்கிறது என்றால் விஜய் அதை வெளிப்படையாக பேச வேண்டும். பேசியிருக்க வேண்டும். ஆனால் அவர் மௌனித்து இருக்கிறார்.
* அவரை தடுப்பது எது என்ற கேள்வி எழுகிறது. நீதிமன்றங்கள் மட்டுமே இதில் நெருக்கடி தருகிறதா? அல்லது பா.ஜ.க.வும் சேர்ந்து அவருடைய திரைப்படம் வெளியாகாமல் தடுப்பதற்குரிய நெருக்கடி தருகிறதா என்ற கேள்விக்கு விஜய் அவர்களால் மட்டும் தான் பதில் சொல்ல முடியும்.
* ஒன்று மட்டும் வெளிப்படையாக தெரிகிறது. அவர் பா.ஜ.க.வையோ அல்லது மோடி அரசையோ வெளிப்படையாக எதிர்க்க விஜய் தயாராக இல்லை, அச்சப்படுகிறார் என்பது மட்டும் தெரிகிறது.
* இந்த அச்சம் ஏன்? என்பதை மக்களிடையே அவர் தெளிவுபடுத்தினால் அவருடைய எதிர்காலத்திற்கு நல்லது.
* விஜயை பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில் இணைக்க முயற்சி நடக்கிறது.
* விஜய்க்கு வியூகம் வகுத்து வரும் சிலரையும் பா.ஜ.க. அச்சுறுத்துவதாக தகவல் வருகிறது.
* நெருக்கடிக்கு ஆளாகி பா.ஜ.க. கூட்டணியில் இணைந்தால் விஜயின் அரசியல் கேள்விக்குறியாகும்.
* விஜய்க்கு பா.ஜ.க. நெருக்கடி தருகிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.
* தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வராத கட்சிகளை பா.ஜ.க. மிரட்டி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விமர்சனத்துக்கு தமிழிசை பதிலடி



**சென்னை, ஜன.25:** பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ,

தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே நீங்கள் ஒரு ட்ரபிள் என்ஜின் (trouble engine) கவர்ன்மென்ட் வைத்துக்கொண்டு எல்லா மாநிலங்களிலும் வெற்றிகரமாக டபுள் இன்ஜின்(double engine) கவர்ன்மென்ட் நடத்திக் கொண்டிருக்கும் மோடி அவர்களை விமர்சிக்கிறீர்கள்.குஜராத், மகாராஷ்டிரா, உத்தர் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் மாநில அளவில் வெற்றியை தருவது மட்டுமல்லாமல் மாநகராட்சி அளவில் வெற்றியை தந்து அது ட்ரிபிள் என்ஜின் கவர்மெண்டாக போய்க்கொண்டிருக்கிறது.

ஆனால் பஞ்சாயத்து தேர்தலை கூட நடத்த பயந்து தமிழ்நாட்டில் ட்ரபிள் என்ஜின் (trouble engine) கவர்ன்மென்ட் ஆக போதை, கடன், பாதுகாப்பின்மை போன்றவற்றை ஏற்படுத்தி ஓட்டிக்கொண்டு இருக்கும் உங்கள் கவர்ன்மென்ட் போல் அல்லாமல் .. தமிழ்நாட்டில் நல்ல டபுள் இன்ஜின் கவர்மெண்ட் கொண்டுவர வேண்டுமென்றால் அதை "டப்பா இஞ்சின்" என்று விமர்சிக்கிறீர்கள். நீங்கள் தான் "தப்பான இன்ஜினை" வைத்துக்கொண்டு ஓட்டிக் கொண்டிருக்கிறீர்கள் முதல்-அமைச்சர் அவர்களே...... தமிழ்நாட்டிற்கு பிரதமர் வந்தவுடனேயே நீங்கள் அடையும் பதற்றம் உங்களது டிவீட்டில் நன்றாகவே தெரிகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தல் இருப்பதால் இன்னும் 10 முறையாவது பிரதமர் தமிழகம் வருவார்: உதயநிதி கருத்து



**சென்னை, ஜன.25:** சட்டப் பேரவை தேர் தல் நடைபெற இருப்ப தால் தமிழகத்துக்கு இன்னும் 10 முறையா வது பிரதமர் மோடி வருவார் என்று சட்டப் பேரவையில் துணை முதல்வர் உதயநிதி கூறினார்.

பேரவையில் நேற்று ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பேசியபோது மினி ஸ்டேடியம் தொடர்பாக துணை முதல்வர் உதயநிதி விளக்கம் அளித்து பேசியதாவது: அதிமுக உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேசும்போது,தொகுதிதோறும் சிறு விளையாட்டு அரங்கங்களை கட்டவில்லை என்றார்.

தமிழகத்தில் மாநகரங்களில் மட்டுமல்லாமல், கிராமங்களிலும் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்க தொகுதிவாரியாக மினி ஸ்டேடியம் அமைக்கும் உத்தரவை முதல்வர் பிறப்பித்தார்.

அதன்படி, 82 தொகுதிகளில் ஸ்டேடியம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. 80 ஸ்டேடியங்களில் பணிகள் தொடங்கப்பட்டு 8 ஸ்டேடியங்கள் திறக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை பிப்ரவரி இறுதிக்குள் கட்டப்படும். ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என பாரபட்சமின்றி அனைத்து தொகுதிகளிலும் இந்த முயற்சி நடக்கிறது.

ஆனால், அவர்கள் என்ன செய்தார்கள், 2017 மதுரையில் எய்ம்ஸ் கொண்டு வரப்போவதாகச் சொல்லி, 2019-ல் அதற்கான ஒற்றை செங்கல்லை வைத்தனர். 8 ஆண்டுகள் ஆகியும் கட்டி முடிக்கப்படவில்லை. பிரதமர் சென்னைக்கு வந்திருக்கிறார். தேர்தல் வரப் போகிறது. இனி, 10 முறையாவது வந்துவிடுவார். அவரை மதுரைக்கு கூட்டிச்சென்று, எய்ம்ஸுக்கு விடிவுகாலம் வரச் செய்ய வேண்டும். அதற்காக தமிழக மக்கள் நன்றிசொல்வர்.

இவ்வாறு உதயநிதி கூறினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com